அறிவடைந்து, கர்த்தரை அடையும்படி தொடர்ந்து போவோம்; அவருடைய புறப்படுதல் அருணோதயம்போல ஆயத்தமாயிருக்கிறது; அவர் மழையைப்போலவும், பூமியின்மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார். ஓசியா 6:3

# அப்போஸ்தலர் : சுவிசேஷம் உலகின் கடைசி பரியந்தம்

## அறிமுகம்

### ஆக்கியோன்

ஆதி திருச்சபை அப்போஸ்தலர் நடபடிகளையும், லூக்கா சுவிசேஷத்தையும் எழுதியதாக கூறுகிறது. அப்போஸ்தலர் நடபடிகளில் கூறுவது போல இரண்டு தொகுதிகளாக அது எழுதப்பட்டிருக்கிறது. (அப் 1:1-2) முதல் தொகுதி இயேசுவின் பிறப்பு தொட்டு அவர் ஊழியப்பாதைகளைச் சொல்லும் போது, இரண்டாம் தொகுதியான அப்போஸ்தலர் நடபடிகள் சீடருக்கு இட்ட கட்டளையிலிருந்து திருச்சபைத் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து பேசுகிறது. இந்த இரண்டு தொகுதிகளும் திருச்சபையின் வேதாகம புத்தக வடிவமைப்பில் (உயழெ) புதிய ஏற்பாட்டு நூலில் பவுலின் எழுத்துகளைக் காட்டிலும் அதிக பக்கங்களைக் கொண்டுள்ளது. இயேசுவின் சீடனாக பவுலின் பயணத் தொழுகை(பார்க்க பிலமோன் 1:24, மற்றும் 2தீமோ 4:11) லூக்கா தம் கண்ணால் திருச்சபையின் வரலாற்றை நேரில் பார்த்தவர். 16ம் அதிகாரத்தில் தம்மையும் வரலாற்றில் இணைத்துக் கொண்டு நாங்கள் என்றே குறிப்பிடுகிறார். ஒரு ஆய்வு களமாக இப்புத்தகம் எழுதப்பட்டது. எழுத்து வடிவத்தில் அவர் ஆக்குகையில் அவர் எழுதுகிறார். ஆரம்பம் முதல் கண்ணாரக் கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளை குறித்து சரித்திரம் எழுத அநேக பேர் ஏற்ப்பட்டபடியினால் ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்து அறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீ அறிய வேண்டுமென்று,,,,,,

## காலம்

ஏறத்தாழ கிபி 59ம் ஆண்டுகளில் இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும். காலத்தை நிர்ணயிகசும் போது லூக்கா ஏற்க்கெனவே கூறியபடி

அநேகம் பேர் சரித்திரம் எழுத ஏற்ப்பட்டபடியினால் ஏற்க்கெனவே லூக்காவுக்கு முன்னும், பின்னும், இயேசுவைப் பற்றிய ஆவணங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும். அவர்

காலத்திலும் கூட ஒரு வேளை அவர் கூறும் ஆவணங்களில் ஒன்று மாற்கின் சுவிசேஷமாகக் கூட இருக்கலாம். அறிஞர்கள் லூக்கா பெரும்பான்மையாக தமது நூலில் மாற்கின் சுவிசேஷப் பகுதிகளை பயன்ப்படுத்துகிறார் என்கின்றனர். மத்தேயுவும் மாற்கைப் பயன்படுத்துகிறார். மாற்கு மூல நூலாக இருந்திருக்கிறது. தவிர லூக்கா தமது நூலில் பவுலைப் பற்றி ஏதும் கூறாமையிலும் தவிர நீரோ மன்னனின் கொடுமைகளைப் பற்றி ஒரு சிறிது அளவு கூட கூறாததினாலும் எருசலேமின் அழிவையோ, யாக்கோபின் மரணத்தையோ, பவுல் மீது நடந்த விசாரணையோ, எதையும் எழுதாமல் இருப்பதினால் ஏறத்தாழ கி.பி 60-களில் இந்நூல் எழுதப்பட்டிருக்கலாம் என்கின்றனர். எப்படியாயினும் திருச்சபையின் முப்பது வருட வரலாற்றை இது கூறுகிறது. இயேசு பரத்துக்கு போன பின்பு சீடர்களின துன்பம், வாழ்வு பயணம், இவை குறித்தும் திருச்சபை வளர்ச்சி, இவை குறித்தும் பேசுகிறது. கர்த்தர் தமது மக்களுக்கு எவ்வளவு உண்மையாயிருக்கிறார் என்பதை இது விளக்குகிறது.

**<u>பார்வையாளர்கள்</u>**

தியோபிலஸ் என்பவருக்கு இது எழுதப்படுகிறது. நிச்சயமாய் இவர் அக்காலத்திய கிரேக்க நாட்டின் மிகப் பெரிய புள்ளியாக இருந்திருக்க வேண்டும். லூக்காவின் நூலை இவர் வெளியிட்டிருக்கவும் கூடும். நிச்சயமாய் இவர் எழுத்துப் படித்த மக்களுக்கே எழுதப்பட்டது. கர்த்தரின் மனித அவதாரம் தொடங்கி அவர் பரமேறும் வரையும், பின்னர் திருச்சபை வரலாறும் அவரால் எழுதப்பட்டது. ஒரு வேளை திருச்சபை பற்றிய புரிதல் குறைவாய் இருந்த மக்களுக்கும் எழுதப்பட்டிருக்கலாம். இவரது எழுத்து ரோம அரசுக்கு சொன்னதெல்லாம் கிறிஸ்தவர்கள் சமூகத்தின் காவலர்கள் என்பதே. யூதர்களின் சந்தேகங்கள், தவறான போதனைகள் ஆகியவற்றை நீக்கவும், யூதமதத்தின் நிறைவே கிறிஸ்தவம் என்றும் எழுதுகிறார். அவர் கூறுவதெல்லாம் யார் யார் இயேசுவை எதிர்க்கிறார்களோ அவர்கள் மேசியாவை எதிர்க்கிறார்கள் என்பதே.

## நோக்கம்

அறிஞர்கள் கூறுகிறார்கள்: அப்போஸ்தலர் புத்தகம் சுவிசேஷங்களிலிருந்து நிருபங்களுக்கு செல்லும் படிகள் என்றும், தவிர யூதமதத்தினின்றும் கிறிஸ்தவத்திற்க்கும் நியாயப்பிரமாணத்திலிருந்து கிருபைக்கும், யூதர்களிடமிருந்து

புறதேசத்து மக்களுக்கும் தேவராஜ்யத்தினின்றும் திருசபைக்கும் இப்புத்தகம் அடியெடுத்துக் கொடுக்கிறது என்றும் கூறுகிறார்கள். பாலமாக இது அமைகிறது.

இப்புத்தகத்தின் நோக்கமே ஆவியானவர் எழுப்பிய திருச்சபை என்பதே. எருசலேமிலே தொடங்கும் இப்புத்தகம் ரோமில் முடிகிறது. எருசலேம் என்னும் புள்ளியிலிருந்து அப்போதைய உலக மையப் புள்ளியான ரோமில் முடிகிறது என்றும் கூறுவார்கள். திருச்சபை கிருபையின் தொடக்கம் என்கிறது. அப்போஸ்தல நடபடிகள் உலகத்து மக்களை சீஷர்களாக ஆக்கும் பணியின் தொடக்கமே. அப்போஸ்தலர் நடபடிகள் ஆவியானவரின் தொடர் செயல்களும் இயேசுவினால் பிடிக்கப்பட்ட மனிதர்கள் மனிதர்களை எப்படி பிடித்து மனிதனாக்கினார்கள் என்று இது விளக்குகிறது. கர்த்ரின் விருப்பம் ஆவியானவரின் வழிநடத்துதல் வளர்ந்தது என்பதே லூக்காவின் சாராம்சம். யோவான் 14:12, கூறுவது போல இயேசுவால் சந்திக்கப்பட்டவர்கள் பெரும் காரியங்களைச் செய்தார்கள். இன்றுள்ள நாம் அன்று தோன்றிய திருச்சபையின் ஓர் அங்கம். இத்திருச்சபை வளரும் பெருக்கம் ஆண்டவர் அநேகரைத் தொட்டு அணைத்து வருவார். அவர் வரும் வரை, அது வரை திருச்சபை தன் கிருபைச் செயல்களை தொடர்ந்து செய்யும்.

# <u>அப்போஸ்தலர்</u>

**<u>பாடம் ஒன்று</u>** : அத்தியாயம் 1

**<u>பாடவாக்கியம்</u>** : இயேசு சீடர்களுக்கு கட்டளை தருகிறார் வாக்குத்தத்தமும் கூடவே

**<u>நாள் 1</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 1:1-5

1. லூக்கா 1:1-4யும் அப் 1:1-5 யும் ஒப்பிட்டு யாருக்கு இவை எழுதப்பட்டன என்று அறிக.

2. எத்தனை நாட்கள் உயிர்த்தெழுந்த ஆண்டவர் அப்போஸ்தலருக்கு தரிசனமானார்.

3. தம்மை பின்பற்றுகிறவர்களுக்கு என்ன கட்டளையிட்டார்.

**<u>நாள் 2</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 1:6-8

1. வசனம் 6-ன் படி அப்போஸ்தலர்களுடைய கேள்வியின் நோக்கம் என்ன?

2. இயேசுவின் பதிலிலிருந்து இயேசு அவர்களுக்கு செய்ய விரும்பியது என்ன?

3. இந்த வசனங்களிலிருந்து கர்த்தரின் பண்புகளாக நாம் அறிபவை எவை?

4. அப்போஸ்தலர் புத்தகத்தின் நோக்கம் 1:8 இந்த நோக்கத்தை உமது சொந்த வார்த்தையில் கூறுக.

5. விசுவாசிகளை சாட்சிகளாக விளங்க வைப்பதில் கர்த்தருக்கு ஏன் விருப்பம்?

<u>நாள் 3</u>

வாசிக்க அப்போஸ்தலர் 1:9-11

1. யோவான் 7:37-39 வாசிக்க பரிசுத்த ஆவியானவர் வரும் முன்னர் தமக்கு என்ன நிகழும் என்று இயேசு கூறுகிறார்.

2. மேகம் எதைக் குறிக்கிறது? (பார்க்க யாத் 13:21-22)

3. திரும்பவும் எப்படி வருவார் என வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டுள்ளது? (மத் 24:30)

<u>நாள் 4</u>

வாசிக்க அப்போஸ்தலர் 1:12-26

1. மேலறையில் சந்தித்துக் கொண்டவர்கள் யார் யார்? ஏன் சந்தித்தார்கள்?

2. யூதாஸ் குறித்து வசனங்கள் கூறுவது என்ன?

3. தலைவர்களை தெரிவு செய்யும் போது அவர்கள் தேடின தகுதிகள் என்ன? வசனம் 21, தவிர தலைவர்களைத் தெரிவு செய்யுமுன்னர் ஏன் ஜெபம் செய்தனர்.

<u>நாள் 5</u>

வாசிக்க அப்போஸ்தலர் 1, மற்றும் 1கொரி 15:17

1. விசுவாசிகளுக்கு உயிர்தெழுதல் ஏன் முக்கியம்?

2. இந்த அத்தியாயத்தில் என்ன வாக்குத்தத்தம் பெற்றீர்கள்?

3. இந்த வாக்குத்தத்தம் என்ன ஆசீர்வாதத்தை உங்களுக்கு அளிக்கிறது.

<u>நாள் 6</u>

<u>பாடம் 1</u> : கிறிஸ்து புது வல்லமையையும், புதிய நோக்கத்தையும் தருகிறார்.

<u>பகுதி :</u> அத்தியாயம் 1

<u>முக்கிய வசனம்</u> : அப்போஸ்தலர் 1:8 பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலன் அடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்.

**<u>பாடவாக்கியம்</u>** : இயேசு சீடர்களுக்கு கட்டளையும், வாக்குத்தத்தமும், தருகிறார்.

<u>வாழ்வின் நெறி</u> : காத்திருங்கள் நம்பிக்கையுடன்

<u>சுருக்கம்</u>

லூக்கா புத்தகத்தில் விட்டதை அப்போஸ்தலர் புத்தகத்தில் லூக்கா தொடர்கிறார். தெயோப்பிலுவுக்கு எழுதுகிறார். முதல் புத்தகம் இயேசு பரத்துக்கு ஏறிய நாள் வரை உபதேசித்த, செயல்ப்பட்ட காரியங்களை பேசியது, இரண்டாம் புத்தகமோ செயல்ப்பட்ட இயேசுவின் தொடர் செயல்ப்பாட்டை பற்றியது. பரிசுத்த ஆவியால் கிறிஸ்துவின் பணி மண்ணில் தொடர்கிறது என்கிறார் லூக்கா. இயேசு வரும் வரை ஆவியானவர் மண்ணில் தம் பணியைத் தொடர்வார். நானும் நீங்களும் இப்பணியில் இருக்கிறோமா?

தவிர அப்போஸ்தலருக்கு இயேசு தந்த தொடர் தரிசனங்கள் மூலம் தாம் உயிருள்ள இயேசுவே என்று காண்பித்திருக்கிறார், தவிர பலருக்கும் தம்மை உயிருள்ளவராக காண்பித்தார். ஆனால் இன்னும் சீடர்கள் பூமியின் மன்னர்கள் ராஜாக்களைப் போலவே இயேசுவையும் அவர்கள் இராஜாவாக ரோமரை வீழ்த்துபவராக சீடர்கள் எதிர்பார்த்திருக்க இயேசுவோ பரிசுத்த ஆவியால் வரும் சத்தியத்தின் அன்பின் ராஜ்யத்தை உருவாக்க அழைக்கிறார். பரிசுத்த ஆவியின் வழிநடத்தல் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களை இயேசுவை போன்றவர்களாக மாற்றுகிறது என்பதே அப்போஸ்தலர் புத்தகத்தின் பொருள் தவிர புத்தகம் முதலில் எருசலேமிலும் பின்பு யூதேயாவிலும் பின்பு சமாரியாவிலும் பிறகு உலகின் கடைசி பரியந்தமும் திருச்சபை வளர்ச்சியைக் காண்பிக்கிறது

<u>அப்போஸ்தலர்</u>

**பாடம் இரண்டு** : அத்தியாயம் 2

**பாடவாக்கியம் :** "பெந்தகோஸ்தே திருச்சபையைத் தொடங்கி வைத்தது"

**நாள் 1**

வாசிக்க அப்போஸ்தலர் 2:1-13

1. வசனம் 1-4-ல் அவர்கள் பார்த்து, கேட்டது, உணர்ந்தது, (பெந்தகோஸ்தே நாளில்) என்னென்ன?

2. எந்த தேசத்தின் மக்கள் அங்கிருந்தனர்?

3. அவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் என்னென்ன மொழிகள் பேசப்பட்டன? என்று கூறினார்கள்?

**நாள் 2**

வாசிக்க: அப்போஸ்தலர் 2:1-13

1. எபேசியர் 5:18-ன்படி ஆவியானவரைப் பற்றி என்ன கூறப்படுகிறது.

2. பரிசுத்த ஆவி வரும் போதான அடையாளங்கள் யாவை? வாசிக்கவும்
   (அ) அப் 4:31
   (ஆ) அப் 6:1-5
   (இ) அப் 13:8-10
   (ஈ) அப் 13:52

4. கலா 5:22-23 வாசிக்கவும் பரிசுத்த ஆவியினால் வரும் குணநலன்கள் யாவை?

5. பரிசுத்தாவியின் இக்குணநலன்களால் நிறைந்துள்ளீர்களா? அவற்றில் ஏதேனும் குணம் உங்களில் உண்டா?

**நாள் 3**

வாசிக்க அப்போஸ்தலர் 2:14-28

1. எந்த தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசனம் நிறைவேறினதாக பேதுரு கூறுகிறார்.

2. பேதுரு கூறுகிறார்: தேவனுடைய நிர்ணயித்த ஆலோசனையின் படியும், முன்னறிவிப்பின்படியும், இயேசு ஒப்புக் கொடுக்கப்பட்டார் என்கிறார். கர்த்தரின் பண்புகள் இந்த வசனத்தால் என்ன விளங்குகிறது.

3. ஏசாயா 53:10-11-ன்படி கிறிஸ்துவின் மரணத்தால் என்ன நிகழ்கிறது.

**நாள் 4**

வாசிக்க அப்போஸ்தலர் 2:17-32

1. கடைசி நாட்கள் என்பது என்ன? (வாசிக்க எபி 1:1-2), (1பேதுரு 1:18-21)

2. கர்த்தரின் நாள் என்பதின் பொருள் என்ன? (2பேதுரு 3:10-13)

3. கடைசி நாட்களில் என்ன நிகழும் (அப் 2: 17-20)

4. பரிசுத்த ஆவியானவர் மிஷ்னரிக்கும், சுவிசேஷகர்களுக்கும், போதகர்களுக்கும் மட்டும் தேவையா? அல்லது இயேசுவை மீட்பர் என்று அங்கீகரிக்கும் ஒவ்வொருவருக்கும் தேவையா?

5. இயேசுவின் மரணத்திற்கு யார் காரணம் என்று பேதுரு குறிப்பிடுகிறார்.

**நாள் 5**

வாசிக்க அப்போஸ்தலர் 2:33-47

1. கிறிஸ்து இப்பொழுது எங்குள்ளார்.?
2. இந்த வசனம் உங்களுக்கு என்ன பொருளைத் தருகிறது.?
3. இருதயத்தில் குத்தப்பட்டவர்களான போது பேதுரு அவர்களை என்ன செய்யச் சொல்கிறார்.?
4. 1 மாறுபாடுள்ள சந்ததி என்று பேதுரு ஏன் குறிப்பிடுகிறார்.?
5. 1 மாறுபாடுள்ள சந்ததி என மக்களைப் பார்க்கிறீர்களா?
6. விசுவாசிகளின் செயல்பாடுகள் என்ன? வசனம் 42?
7. பக்தியுள்ள அம்மக்களுக்கு வந்த ஆசீர்வாதங்கள் எவை?

**நாள் 6**

**பாடம் 2** : திருச்சபை பிறந்தது

**பகுதி :** அத்தியாயம் 2

**முக்கிய வசனம்** : அப்போஸ்தலர் 2:7 கடைசி நாட்களில் நாம் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் அப்பொழுது உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்வார்கள் உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள் உங்கள் மூப்பர்கள் சொப்பனங்களை காண்பார்கள்.

**பாடவாக்கியம்** : பெந்தகோஸ்தே நாள் திருச்சபை உருவாகிற்று,

**<u>வாழ்வு நெறி</u>** : பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுக்கு நம்மை ஒப்புவிக்கும் போது நாம் மாற்றமடைகிறோம்.

**<u>சுருக்கம்</u>**

இயேசு தந்த வாக்குத்தத்தம் அத்தியாயம் 2-ல் நிறைவேறியது. பலமான காற்றாக ஆவியானவர் வருகிறார். அங்குள்ள மக்களின் மொழிகளில் பேசவைக்கிறார். இயேசுவைப் பற்றிய செய்தி பல மொழிகளில் அங்குள்ள மக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. கர்த்தர் பல மொழி வரங்களால் மக்களிடையில் ஐக்கியத்தை வரவழைக்கிறார். அப்போஸ்தலர் நடபடிகளில் பேசப்படும் பேதுருவை ஒப்பிடும் போது சுவிசேஷத்தில் காணப்படும் பேதுரு மிகவும் சின்னவரே. பரிசுத்த ஆவியால் ஆட்க் கொள்ளப்பட்டு தம் முதல் பிரசங்கத்தை தெரிவிக்கிறார். யோவேல் 2:28, தீர்க்கதரிசனத்தை பேதுரு விளக்குகிறார். பேதுருவின் பிரசங்கம் 3000 பேரை ஆண்டவருக்குள் அழைத்து

வருகிறது. துருக்கி, எகிப்து, ஈராக், ஈரான், ஆப்பிரிக்கா, இத்தாலி, எங்கும் திருச்சபை வளர உதவுகின்றது. ஆதித்திருச்சபை தன் மனதாலும், செயலாலும், ஒன்றித்து வாழ்வைக் கொண்டாடியது. தங்களது உடைமைகளை பொதுவாக்கினார்கள் மக்கள். ஒருவரை ஒருவர் தாங்கினார்கள். இந்த ஆவிக்குரிய வாழ்வு கிறிஸ்துவை பிறருக்கு அறிமுகப்படுத்தியது. ஆதிக்கிறிஸ்தவர்களைப் போல அன்பும் கரிசனையும் உடையவர்களாக நாம் இருப்பின் சமூகத்தில் என்ன மாற்றங்கள் ஏற்ப்படும்.? பெந்தகோஸ்து நாள் விசுவாசிகள் வாழ்வில் பெரும் மாற்றத்தை கொண்டு வந்தது. எனினும் சபை யூத வழக்கங்களையும், ஆலயத்தையும் கூடவே கொண்டது. தவிர்த்து அவர்கள் அனுதினமும் வீடுகள் தோறும் அப்பம் பிட்டார்கள், யூத ஜனங்களுக்கு பிரசங்கித்தார்கள், புதிய யூத மக்கள் அடங்கிய திருச்சபை உருவாயிற்று, ஆனால் திருச்சபையாராக இருக்க யூத வழக்கங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென தவறாகப் புரிந்து கொண்டார்கள். பரிசுத்த ஆவியை பெற யூத வழக்கமும் தேவை என்றும், கூறிக்கொண்டார்கள். ஒருவேளை உலகெங்கும் சொல்லுங்கள் என்ற வார்த்தையை மறந்தார்களோ என்னவோ? எனினும் இப்புதிய கொள்ளையும், இயேசுவைப் பின்பற்றும் கூட்டமும் இதர யூத ஜனங்களுக்கு எச்சரிப்பை தந்தன. ஆதி சபையை துன்பப்படுத்தும் நிலைக்கு யூதத்தலைவர்களை உந்தித் தள்ளியது. ஸ்தேவான் அதில் முதல் பலி.

*ஆவியானவருக்கு பதில் தந்தால் நாம் மாற்றப்படுவோம்*

<u>அப்போஸ்தலர்</u>

<u>பாடம் மூன்று</u> : அத்தியாயம் 3-4

**<u>பாடவாக்கியம்</u>** : பேதுருவின் பிரசங்கம் வல்லமையைமட்டுமின்றி ஐக்கிய ஒன்றிப்பையும், ஜெபத்தையும், துன்புறுத்தப்படுதலையும் கொண்டுவந்தது.

<u>நாள் 1</u>

வாசிக்க அப்போஸ்தலர் 3:1-11

1. பேதுருவும் யோவானும், எங்கிருந்தார்கள்.? பிச்சை கேட்கிறவன் எதை எதிர்பார்த்துப் பார்த்தான்.
2. எந்தப் பெயரால் பேதுரு அவனை குணமாக்கினார்.?
3. ஜனக் கூட்டத்தின் எதிர் விசைகள் என்ன?

**<u>நாள் 2</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 3:12-26

1. மக்கள் கூட்டத்திற்கு இயேசுவைப்பற்றி சொல்ல நேர்ந்த பொழுது பேதுரு பயன்படுத்திய வசனம் எது?
2. வசனம் 3:16-ல் நாமத்தைப்பற்றும் விசுவாசம் என்றால் என்ன?
3. சர்வாங்க சுகம் எங்கு கிடைக்கும்? அதை உங்கள் வாழ்வில் கண்டதுண்டா?
4. தீர்க்கதரிசிகள் முன் குறித்தது எது?
5. ஆபிரகாம் மூலமாகவோ, தீர்க்கதரிசிகள் மூலமாகவோ, நமக்கு கொடுக்கப்பட்ட உடன்படிக்கைகள் என்ன?

**நாள் 3**

வாசிக்க அப்போஸ்தலர் 4:1-12

1. உயிர்த்தெழுதல் பற்றி கேட்டவுடன் ஜனங்களின் எதிர் விசை என்ன?

2. பேதுருவுக்கும், யோவானுக்கும் நடந்தது என்ன?

3. பேதுரு பேசும்படியான சக்தி எவ்விடமிருந்து வந்தது?

4. அதே வல்லமையை கர்த்தர் உங்களுக்குத் தந்திருக்கின்றாரா? பகிர்ந்து கொள்க,

**நாள் 4**

வாசிக்க அப்போஸ்தலர் 4: 1-22

1. பரிசுத்த ஆவியால் நிறைந்தால் என்ன நிகழும்?

2. இயேசுவே உலகின் மீடபர் என்று என்ன வசனம் கூறுகிறது? வசனம் 12

3. கீழ்க்கண்டவர்களின் செயல்கள் குறித்து கூறுக?
   (அ) பேதுரு, யோவான்
   (ஆ) மக்கள்
   (இ) அதிகாரத்தில் உள்வர்கள்

**நாள் 5**

வாசிக்க அப்போஸ்தலர் 4:23-37

1. விசுவாசிகள் எதற்காக கர்த்தரை துதித்தார்கள்?

2. இந்த ஜெபத்தில் பாவ அறிக்கை இருக்கிறதா?

3. எவ்விதம் கர்த்தர் அவர்களது ஜெபத்திற்கு பதில் தந்தார்?

4. உங்களுக்கு கர்த்தர் ஜெபத்திற்கான பதிலை தந்தாரா?

5. இயேசுவின் நாமத்தில் சுகம் உண்டா?

**நாள் 6**

**பாடம் 3 : "தைரியத்திற்க்காக சபை ஜெபிக்கிறது"**

**பகுதி :** அத்தியாயம் 3,4

**முக்கிய வசனம்** : அப்போஸ்தலர் 4:12 அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை நாம் இரட்சிக்கும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை.

***பாடவாக்கியம்*** : பேதுருவின் பிரசங்கம் வல்லமையும், ஒன்றிப்பு ஜெபத்தையும், துன்புறுத்தப்படுதலையும் கொண்டு வருகிறது.

***வாழ்வுநெறி*** : பரிசுத்த ஆவியானவர் தரும் வல்லமை நமது பேச்சை, நட்பை ஜெபத்தை பண்புகளை தேவைகள் மீதுள்ள நமது பார்வையை மாற்றி அமைக்கிறது.

***சுருக்கம்***

அப்போஸ்தலர் 3-7-ல் திருச்சபை இயேசுவை பிரசங்கித்தது. சுகவீனமானவர்களை சுகப்படுத்தியது. சிறைக் கதவுகளைத் திறந்தது. நடக்க இயலாதவன் குணமடைகிறான்.(3:19) நடந்து குதித்து எழுந்து தேவனுடைய மகிமையை விளக்கினான். இதைப்பார்த்த மக்கள் பிரமித்தனர். இதற்கு முன்பு நடக்க இயலாதவன் மாறிப் போனானே என்ற ஆச்சரியத்தில் மூழ்கினார். பேதுரு இச்சந்தர்ப்பத்தை பயன் படுத்தி தீர்க்கதரிசியின் முன்னறிவித்தலை மற்றும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை பிரசங்கித்தார். மனந்திரும்புங்கள் என்று மக்களை அழைத்தார்.

அத்தியாயம் 4-ல் சதுசேயரின் எதிர்ப்பு பேதுருவுக்கு வருகிறது. அவர்களும் ஆசாரியர்களும் தேவாலயத்துப் படைகளும் பேதுருவையும், யோவானையும், கைது செய்தனர். சிறையில் அடைத்தனர். எனினும் 5000 பேர் விசுவாசிகள் ஆனார்கள்

அடுத்த நாள் விசாரணையில் பேதுருவின் உரை பரிசுத்த ஆவியால் நிறைந்து உலுக்கியது. வசனம் 13: கூறுகிறது. பேதுருவும், யோவானும் படிப்பறிவற்றவர்கள் தேவனுடையவர்கள். எனினும் அவர்கள் பிரசங்கமும், உரைகளும், வல்லமை நிறைந்ததாய் ஆகியுள்ளதே என்று சதுசேயர் அதிசயித்தனர் என்கிறது. நம்மிடத்தில் வாசம் செய்யும் ஆவி வல்லமையால் நம்மை மாற்றும். அது கடவுளின் ஆவி நம்மைப் பார்க்கிறவர்களும் பேசுகிறவர்களும் நம்மிடத்தில் இருக்கும் ஆவியைக் கண்டு கொள்வார்கள். பேதுருவும் யோவானும் விடுதலை செய்யப்பட்டார்கள். சகோதரர்களோ ஊழியக்காரர்கள் தைரியமாய் வசனம் சொல்ல ஜெபித்தார்கள் ஆண்டவருடைய ராஜ்ஜியத்தை கட்ட சபையாரின் ஜெபம் அவசியமானது. கிருபை மக்களை மாற்றும்.

*பரிசுத்த ஆவியின் தைரியமான வழிநடத்தல் நம்முடைய பேச்சை, நட்பை, ஜெபத்தை, தேவைகள் மீதுள்ள நமது பார்வையை மாற்றும்.*

அப்போஸ்தலர்

**<u>பாடம் நான்கு</u>** : அத்தியாயம் 5-7

**<u>பாடவாக்கியம்</u>** : ஆதித்திருச்சபைக்கு அதின் உள்ளும், புறம்புமான சோதனைகள் வலியைத் தருகிறது.

**<u>நாள் 1</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 5:1-16

1. அனனிய என்ன செய்தார்? அவருடைய செய்கைக்கு அவருடைய மனைவி சம்மதித்திருந்தாரா?

2. அனனியாவும், சப்பிராளும், பரிசுத்த ஆவிக்கு எதிராக பொய் சொன்னார்கள் என எந்த வசனம் கூறுகிறது.

3. யோவான்: 15:26-27-ல் பரிசுத்த ஆவிபற்றி அறிந்து கொள்வது என்ன?

4. கர்த்தரைப் பற்றி இங்கிருந்து என்ன அறிகிறோம்.

5. வசனம் 12-16-ல் நாம் நிறைய அற்புதங்களை வாசிக்கிறோம், இன்று எந்த விதமான அற்புதங்கள் நடக்கின்றன? அவற்றின் விளைவுகள் என்ன?

**<u>நாள் 2</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 5:17-42

1. மதவாதிகளிடம் என்ன பண்புகளைப் பார்க்கிறீர்கள்?

2. கிறிஸ்து இயேசுவின் மீதுள்ள நம்பிக்கைகளையும், அன்பையும் அப்போஸ்தலர்கள் எவ்விதம் வெளிப்படுத்துகின்றனர்.

3. யூதர்களுடைய சட்டங்களை காட்டிலும் கிறிஸ்துவுக்கு சாட்சி பகிர்வதே முக்கியம் என அப்போஸ்தலர் ஏன் கருதினார்கள்(5:30-32)

4. இவ்வசனங்கள் எதிர்ப்புகளை எப்படி சுட்டிக்காட்டுகின்றன.?
   ய. அ பிலிப் 1:29
   டி. ஆ தீமோ 3:12

5. வசனம் 41,42, ல் அப்போஸ்தலரின் பண்புகளாக நாம் பார்ப்பவை எவை?

**நாள் 3**

வாசிக்க அப்போஸ்தலர் 6:1-10

1. என்ன பிரச்சனை வந்தது? அது எவ்வாறு தீர்க்கப்பட்டது.?

2. மூப்பர்களின் பண்புகளும், தகுதிகளும், யாவை?

3. ஸ்தேவானில் காணப்பட்ட தகுதிகள் யாவை?

4. எந்த விதமான பண்புகளை பெற்றுக் கொள்ள நீங்கள் விரும்புகிறீர்கள்?

**நாள் 4**

வாசிக்க அப்போஸ்தலர் 6:11-15

1. ஸ்தேவானுக்கு விரோதமான குற்றச்சாட்டுகள் என்ன?

2. லூக்கா 12:11, மத் 10:19-20, சூழல்களில் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று எவ்விதம் கூறுகின்றன?

3. ஏன் ஸ்தேவானின் முகம் தேவதூதரின் முகத்தைப் போல் மகிமையானது?

**<u>நாள் 5</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 7

1. ஸ்தேவான் குறிக்கின்ற முக்கிய கருத்துகள் எவை?
    ய. (அ) அப் 7: 1-38
    டி. (ஆ) அப் 7: 39-50
    உ. (இ) அப் 7: 51-53

2. ஸ்தேவானை கர்த்தர் எப்படி தேற்றினார்?

3. ஸ்தேவானின் ஆடைகளைப் பார்த்துக் கொண்டது யார்?

4. யாரிடம் ஸ்தேவான் ஜெபித்தார்? அப் 7:59

**<u>நாள் 6</u>**

**<u>பாடம் 4</u>** : "தொடரும் வலிகள்"

**<u>பகுதி :</u>** அத்தியாயம் 5-7

**<u>முக்கிய வசனம்</u>** : அப் 5:29, மனுஷர்களுக்கு கீழ்படிகிறதைப் பார்க்கிலும், தேவனுக்கு கீழ்ப்படிவதே அவசியமாய் இருக்கிறது.

**<u>பாடவாக்கியம்</u>** : ஆதிதிருச்சபைக்கு அதன் உள்ளும் புறம்புமான சோதனைகள் வலியைத் தருகின்றன.

**<u>வாழ்க்கை நெறி :</u>** ஆவிக்குரிய சோதனைகள் கனி கொடுக்கின்றன. நமக்குள் அவருடைய வல்லமையைத் தருகின்றன. ஆவிக்குரிய ஆழமான வேர்கள் உருவாகின்றன.

**<u>சுருக்கம்</u>**

ஆதித்திருச்சபை அனுபவித்த மகிழ்ச்சியை அனனியாவும், சப்பீராளும் கெடுத்துப் போட்டனர். இந்த நிகழ்வு நமக்கு கற்ப்பிக்கும் பாடம் என்னவெனில் பார்ப்பதற்கு வெளியில் அழகாக இருக்கும் ஆனால் கர்த்தரோ இருதயத்தை தேடுகிறார். அவரே நீதிபதி என்பதாகும், இந்த நியாயத்தீர்ப்பு இளம் சபைக்குரிய பரிசுத்தமாகுதலின் ஒன்றாக கருதப்படுகிறது. இது கர்த்தர் பாவத்தை எவ்விதம் பார்க்கிறார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. அதிகாரம் 5:11 கூறுகிறது. சுபையாரெல்லாருக்கும் இவைகளை கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று என்பதாம். இந்த பயத்தினால் ஜனங்கள் அவர்களை மேன்மைப்படுத்தினார்கள். திரளான மக்கள் கர்த்தரிடமாக சேர்க்கப்பட்டார்கள்.

இந்த அதிகமான மக்கள் எருசலேமிலே தோன்றிய புதிய சபையில் சேர்க்கப்படும் அதிசயம் மதவாதத் தலைவர்களுக்கு பொறாமையை கிளப்பிவிட்டது. அவர்கள் அப்போஸ்தலர்களை சிறைச்சாலையில் வைத்தார்கள். ஆனால் கர்த்தரோ அற்புதம் செய்து அவர்களை விடுவித்தார் சிறைச் சாலையினின்றும் வெளிவந்த அவர்கள் மீண்டும் ஆலயம் சென்று போதகம் பண்ணினார்கள் ஜீவ வார்த்தைகளை கூறினார்கள்(5:20) ஆலோசனை சங்கம் அவர்களை மீண்டும் பிடித்து தன்முன் நிறுத்தியது.(5:27) தங்களுடைய ஆளுகைக்கு எதிராக அவர்கள் கலகம் செய்கின்றனர் என்று அப்போஸ்தலர் மீது குற்றஞ் சாட்டப்பட்டது. ஆனால் பேதுருவும், யோவானும், அவர்களுக்கு மறுமொழியாக மனிதருக்கல்ல தேவனுக்கே நாங்கள் கீழ்ப்படிவோம் என்றார்கள்.(5:9) ஆலோசனை சங்கம் அவர்களை கொல்லாமல் நியாயசாஸ்திரியாகிய கமாலியேலின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டது. கமாலியேல் சொன்னார் இந்த மனுஷருக்கு ஒன்றும் செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள். இந்த யோசனையும், இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்தால் ஒழிந்து போம் தேவனால் உண்டாயிருந்தால் அதை ஒழித்து விட உங்களால் கூடாது. தேவனோடு போர் செய்கிறவர்களாய் காணப்படாதபடி பாருங்கள்(5:38,39) ஆலோசனை சங்கம் கமாலியேலின் யோசனையை எற்றுக்கொண்டது. அப்போஸ்தலரை கொல்லவில்லை மாறாக அடித்து இயேசுவை பேசக்கூடாது என்று கட்டளையிட்டது. மிரட்டியது.

இதன் பின்னர் தான் அப்போஸ்தலர் காட்டிய மிகச் சிறப்பான நிகழ்வு வருகின்றது. இயேசுவின் நாமத்திற்க்காக தாங்கள் அவமானம் அடைவதற்கு பாத்திரராக எண்ணிர்கள். சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டுப் போனார்கள். மகிழ்ச்சியாய் இருந்தது அப்போஸ்தலரே ஆலோசனை சங்கத்தாரல்ல. இயேசுவினால் வரும் வலியை மகிழ்ச்சியாய் ஏற்கிறீர்களா? உலகினால் வரும் வலியை விசுவாசிகள் பொதுவாக இப்படி ஏற்ப்பதில்லை. வலியை மகிழ்ச்சியாய் எண்ணுவது ஆவியானவரின் திடமான வல்லமையினாலேயே சாத்தியமாகும். அப்போஸ்தலர்களை தாழ்மையான நடத்தைக்கும் மகிழ்ச்சிக்கும் உந்தித்தள்ளியது. பரிசுத்த ஆவியானவர் அவரே நமக்கு பலமும், வழிநடத்துபவர் வலிமைப்படுத்துகிறவர் வாழ்வுக்கு நடத்துபவர். நம்முடைய பங்கு அவருக்கு நம்மை ஒப்படைப்பதே அவர் எங்கு நம்மை வழிநடத்துகிறாரோ அங்கு செல்வதே, எங்கு நம்மை வைக்கிறாரோ அங்கு அவர் பணி செய்வதே.(யோவான் 14, மற்றும், 16 பார்க்க)

அத்தியாயம் 6-ல் கிரேக்க விதவைகளின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அது புகாராக அப்போஸ்தலருக்கு வருகிறது. இந்த உரிமை சார்ந்த முரண்பாடுகளை கவனிக்க அவர்கள் மனிதர்களை நியமிக்கிறார்கள். யார் அவர்கள்? பரிசுத்த ஆவியால் நிறைந்தவர்கள். ஞானவான்கள், நற்செய்தி பெற்றவர்கள். இந்த யோசனை சபையாருக்கு பிடித்திருந்தது. இதனால் தேவ வசனம் விருத்தியடைந்தது.

இந்த பகுதி ஆவிக்குரிய கொடைகளை பேசுகிறது. அப்போஸ்தலர்கள் தமது கொடைகளான ஜெபத்திற்க்கும், போதனைக்கும் செல்ல, நற்சாட்சி பெற்ற ஏழு பேர் விசாரனை செய்ய நியமிக்கப்பட்டனர். போதக பணிபற்றி பேசும் போது போதகரே எல்லாம் செய்ய திறமை பெற்றவர் என்று கருதப்படுகிறது. அது உண்மையல்ல. ஆவிக்குரிய கொடைகளுக்கு தகுந்தவாறு மனிதர்கள் பல்வேறு பணிகளுக்கு நியமிக்கப்பட வேண்டும். 1பேதுரு கூறுகிறது. ஒவ்வொருவருக்கும் ஆவிக்குரிய கொடைகள் தரப்பட்டிருக்கின்றன என்று உங்களுக்கு கடவுள் தகுந்த ஆவிக்குரிய கொடைகள் என்ன? ஸ்தேவான் பந்தி விசாரனைக்கு நியமிக்கப்பட்டான். ஆனால் விடுதலை பெற்றவர்கள் என்று தம்மை கருதிக்கொண்ட லிபர்த்தீனரின் ஆலயத்தினருக்கு எதிராக அவன் தர்க்கம் பண்ணுகிறான். ஸ்தேவான் மோசேக்கு விரோதமாகவும் தேவனுக்கு விரோதமாகவும், பேசுகிறான் என்று பொய்ச் சாட்சிகளை அவர்கள் தூண்டிவிடுகிறார்கள். ஸ்தேவான் 52 வசனங்கள் அடங்கிய பிரசங்கத்தை அவர்களுக்கு கூறுகிறான். ஆவர்களின் பொய் திரையை கிழிக்கிறான்.

அவனுடைய முகமோ தேவதூதன் முகம் போலாகிறது.(6:15) அவனை எதிர்த்தவர்கள் ஒன்று கூடினார்கள். நகரத்திற்க்கு புறம்பே தள்ளினார்கள், கல்லெறிந்து கொன்றார்கள். அவனோ இயேசுவின் வழியைபின்பற்றி இந்த பாவத்தை கல்லெறிந்து கொன்றவர்களிடம் மன்னியும் என்கிறான். ஸ்தேவானின் முதல் இரத்த சாட்சி,

*ஆவிக்குரிய போதனைகள் கனிகொடுக்கின்றன நமக்குள் ஆவிக்குரிய வல்லமை தருகின்றன ஆவிக்குரிய ஆழமான வேர்கள் உருவாகின்றன.*

அப்போஸ்தலர்

**பாடம் ஐந்து** : அத்தியாயம் 8 - 9

**பாடவாக்கியம்** : ஸ்தேவானின் மரணம் தொடர் துன்புறுத்துதலைத் தந்தது. ஆனால் சுவிசேஷம் பரவியது.

**நாள் 1**

வாசிக்க அப்போஸ்தலர் 8:1-8

1. ஸ்தேவான் கல்லெறிந்து கொலை செய்யப்பட்டதும் என்ன நிகழ்ந்தது? (வசனம் 1,2,3,4,)

2. பிலிப்பு ஏற்கெனவே சமாரியா சென்றிருந்த மக்கள் கூறிய சுவிசேஷத்தினால், விளைந்ததை எப்படி அறுக்கிறார்.? (யோவான்: 4:39-42)

3. உங்களைப் போலன்றி வேறுபட்ட கலாச்சார மக்களை சந்திக்க என்ன செயல்களை மேற்கொள்ள வேண்டும்.?

**நாள் 2**

வாசிக்க அப்போஸ்தலர் 8:9-40

1. சிதறிப் போனவர்கள் என்ன செய்தனர்?

2. விசுவாசத்தை கூறியதனால் எதிர்ப்பைச் சந்தித்திருக்கிறீர்களா?

3. பிலிப்பு எங்கு சென்று கந்தாகே மந்திரியை சந்திக்கிறான்.?

4. ஏசாயா 53:3-6-ல் நம்முடைய என்ற இடங்களில் எங்களுடைய என்று வாசித்தும் நம்முடைய என்ற இடங்களில் என்னுடைய என்று போட்டும் வாசித்துப் பாருங்கள்.

**நாள் 3,4**

வாசிக்க அப்போஸ்தலர் 9:1-19, 22:1-16, 26:9-19

1. பவுலினுடைய மனமாற்றம் குறித்து என்ன கூறுகிறது. இந்த பகுதிகள்?
    ய. (அ) ஒளி
    டி. (ஆ) குரல், சத்தம்
    உ. (இ) இயேசுவின் வார்த்தைகள்
    ன. (ஈ) பவுலின் கீழ்ப்படிதல்

2. இயேசுவை நீங்கள் அறிந்த படியால் நீங்கள் நேர்மை என்று முன்பு கருதியவைகள் என்ன ஆயின?

3. அனனியாவுக்கு வந்த அழைப்பில் என்ன பார்க்கிறீர்கள்? (9:10)

**நாள் 5**

வாசிக்க அப்போஸ்தலர் 9:20-31, கலாத்தியர் 1:11-24

1. தமஸ்குவை விட்டு பவுல் எங்கு சென்றார்.? ஏன் அங்கு சென்றார்?

2. அப் 9:15, ரோமர் 1:5, கலா 1:16-ல் பவுலுக்கு கர்த்தர் கொடுத்த ஊழியம் என்ன?

3. பவுலைச் சேர்த்துக் கொண்ட பர்னிபாவின் பார்வை என்ன?(வசனம் 2:27)

4. எருசலேமிலே பவுல் தங்கிய போது அவனுக்கு விரோதமாய் வந்த நடவடிக்கைகள் என்ன?

5. வளரும் திருச்சபையின் பயன்கள் என்ன?

6. உங்கள் வாழ்வில் என்ன பண்புகள் வேண்டும் என்று கருதுகிறீர்கள்?

**நாள் 6**

**பாடம் : 5** "சுவிசேஷம் கட்டவிழ்க்கப்படுகிறது"

**பகுதி** : அதிகாரம் 8-9

**முக்கிய வசனம்** : அப்போஸ்தலர் 8:4 சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தார்கள்

**பாடவாக்கியம்** : ஸ்தேவானின் மரணம் நிறைய துன்பத்தை தந்தது. எனினும் சுவிசேஷம் பரவியது

**வாழ்வின் நெறி** : துன்பப்படுத்த சபை நமது கீழ்ப்படிதலை மற்ற மனிதர்களின் இதயத்தை தீர்க்க பயன்படுத்துவார்.

**சுருக்கம்**

ஸ்தேவானின் மரணம் மிகுந்த வருத்தத்தை தருகிறது. ஆனால் அவர் மரணத்தை கர்த்தர் ஏற்கிறார். அவர் மரணம் அடையும் போது அங்கே அவர் இருந்தார். சபை துன்புறுத்தலை அன்றிலிருந்து சந்திக்க ஆரம்பித்தது. சீடர்கள் சிதறிப் போக ஆரம்பித்தனர் யூதேயா முழுவதும் சென்றனர். சமாரியாவுக்கு சென்றனர் உலகம் எங்கும் சென்றனர்(அப் 1:8) சபையின் மீதான துன்புறுத்தல் உலகிற்க்கு கொண்டு சென்றது. புனிதர்களின் சாவே திருச்சபையை நிலை நாட்டியது. விசுவாசி மனிதர்கள் விசுவாசத்திற்காக மரிக்கும் போது திருச்சபை வளர்கிறது, நம்முடைய விசுவாசம் உலகிற்கு ஒளியைக் கொண்டுவர ஜெபிப்போம்.

பவுலை பொறுத்த வரை அவனுக்கு நேர்ந்த மனமாற்றத்தின் விளைவை அவ்வவ்போது அவன் அறிந்திருக்காவிட்டாலும் கர்த்தர் அவனுக்கு என்று உலக சுவிசேஷமாக்கலில் பெரும் திட்டம் வைத்திருக்கிறார். ஸ்தேவானின் மரணத்துக்கு அவனே சாட்சி. ஸ்தேவானின் ஆடைகளைக்கவனித்துக் கொண்டிருந்தவன்

அவனே, ஸ்தேவானின் விண்ணப்பம் அவன் காதிலும் விழுந்தா என்ன? ஸ்தேவானின் மரணத்திற்க்கு பிறகு பவுல் சீஷரைப் பயமுறுத்தி கொலை செய்ய எத்தனித்தார்.

இயேசுவுக்கு சுவிசேஷம் பரவுவதில் விருப்பம். ஆனால் அதற்கென வாய்ப்பு ஸ்தேவான் மரணத்தில் கிட்டியது கிறிஸ்தவானான ஒருவர் மார யுதராக இருக்க வேண்டியவை அச்சமில்லை என்று புரிந்து கொள்ளவே பெந்தகொஸ்து நாளிலிருந்து திருச்சபைக்கு 20 ஆண்டுகள் பிடித்தது. எபே

2:11-22-ல் பவுல் கூறும் வார்த்தைகளில் நாம் அறிவது என்னவெனில் 1 யுதரும், கிரேக்கரும், மற்றும் அனைத்து மக்களும் கர்த்தருடைய ஆவியில் ஒன்றினைந்து இனைக்கப்பட்டு பரிசுத்த ஆலயமாக்கப்படுகிறார்கள். 2. யுதருடைய குறிப்பாக யுத கிறிஸ்தவர்களின் மனமாற்றம் கையினால் செய்யப்பட்ட ஆலயத்திலிருந்து கையினால் செய்யப்படாத மக்களுடன் இருக்கும் கர்த்தரின் மக்களின் ஆலயத்திற்க்காக மனிதர்கள் மனம்மாறுவது, அத்தியாயம் 8-ல் பிலிப்புவின் மூலம் பெரும் அதிசயங்களைப் பார்க்கிறோம். ஸ்தேவானின் மரணத்திற்க்கு பிறகு பிலப்பு சமாரியா பகுதிக்கு செல்கிறார். சமாரியா சுத்தமில்லாத எதிரி மக்களின் இருப்பிடம் என்று யுதர்களால் கருதப்பட்ட ஒன்று. சமாரியர்கள் சுவிசேஷத்தை பெற்றார்கள். அடையாளங்களும், அற்ப்புதங்களும், அங்கே செய்யப்பட்டன. பேதுருவும், யோவானும், பிலிப்புடன் இனைந்தார்கள். பரிசுத்த ஆவியால் நிரப்பபட ஜெபித்தார்கள். அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள் கர்த்தருடைய வசனங்கள் நல்ல நிலத்தில் மட்டுமல்ல கெட்டுப் போன நிலங்களின் மீதும் விதையாக விழுந்தது. சீமோனாகிய மாயவித்தைக்காரன் ஒரு கெட்டுப் போன நிலம் கர்த்தரின் செய்தி கேட்டு ஆச்சரியத்தில் முழ்கினான். ஆனால் பரிசுத்த ஆவியானவர் செய்த அற்ப்புதங்களைப் பார்த்து தேவனுடய வரத்தை பணத்தினனால் சம்பாதிக்க எண்ணிணாண்(8:20). ஞானஸநானம் பெற்றிருந்தும் இயேசுவை விசுவாசித்திருந்தும் காசினனால் இயேசுவை விலைக்கு வாங்க விரும்பினான். வல்லமையும் சக்தியையும் பணத்தால் ஆட்கொள்ள ஆசைப்பட்டான். பேதுரு அவனிடம் நீ கசப்பான பிக்கில் அகப்பட்டுள்ளாய் என்றார்.

பிலிப்பு எத்தியோபிய தேசத்து மந்திரியிடம் சென்றார். ஆவியானவர் அவனை தென் திசை நோக்கி போக கூறினார். தென் பயணம் மேற்க்கொண்டிருந்த மந்திரியும், காசாளருமன அவனிடம் பிலப்பு பேசி ஏசாயா
தீர்க்கதரிசனம் மற்றும் இயேசுவைக் குறித்து விளக்கினார். மந்திரி ஞானநானம் பெற்றார். எத்தியோபியாவுக்கு சுவிசேஷம் சென்றது.

அத்தியாயம் 9-ல் சவுலின் மனமாற்றம் விளக்கப்படுகிறது. சவுல் பவுலாகிறார் அனனியா கை வைத்தபோது தன் கண்களிலிலுந்து மீன் செதில்கள் விழுந்து போய் தான் பார்வைப் பெற்றதை அறிந்தார். மனமாற்றம் அடைந்த சவுலை யுதர்கள் கொலை செய்ய எத்தனித்தனர். சீஷர்கள் சவுலை கூடையில் வைத்து மதில் வழியாய் இரக்கி விட்டு தப்பிக்கப்பன்னினார்கள். இயேசுவின் அடியார்களை கொலை செய்ய வந்தவனே அவர் தேவகுமாரனென்று

ஆலயங்களில் பிரசங்கித்தது ஆச்சரியமே. அவன் கிரேக்கருடன் பேசி தர்கித்தான் என்று வசனம் கூறுகிறது. (9:29)

அவன் மனமாற்றத்தை புரிந்துக் கொள்ளாத இன்னும் பல தீர்க்கதரிசிகள் அவனை சந்தேகிக்க பர்னபாஸ் அவனை சோதித்து கொண்டாா. எனவே எதிர்ப்பைக் கண்டு நீங்கள் பயப்பட வேண்டாம். கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தருடைய வழியில் நடக்கும் போது எதிர்ப்புகள் புதிய பரிமானங்களை உங்களுக்கு திறந்து வைக்கும். நமது சகாயர் நம்மை விட்டு நீங்கார். (யோவான் 14:15-21)

சவுல் பவுலானார். பவுல் என்பது ரோமருடைய பெயர். கலாத்தியர் 1:17 கூறுகிற. அவர் கர்த்தரை சந்திக்க வனாந்திரம் சென்றார். என்று கர்த்தரை தரிசிக்கும் அவரது வழிநடத்துதலை பெற்றுக் கொள்ளவும் வனாந்திர யாத்திரைக்கும் கர்த்தர் உங்களை நடத்துபவராக துன்பத்தில் நமது கீழ்ப்படிதலை கர்த்தர் பயன்படுத்தி புதிய வாசல்களை திறப்பார்.

## அப்போஸ்தலர்

**<u>பாடம் ஆறு</u>** : அத்தியாயம் 9-11

**<u>பாட வாக்கியம்</u>** : பேதுருவின் மனமாற்றமும், புறதேசத்து மக்களிடையே அவன் ஊழியமும்.

**<u>நாள் 1</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 9:32-43

1. இந்த வசனங்களில் கர்த்தர் பேதுருவை எப்படி பயன்படுத்துகிறார் என்று விளக்கப்படுகிறது?

2. யோப்பாவில் யாருடைய வீட்டில் பேதுரு தங்கினார்.?

**<u>நாள் 2</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 10:1-8

1. கொர்நெலியுவுக்கு கொடுக்கப்பட்ட தரிசனத்தில் பேதுரு, அவன் என்ன செய்து கொண்டிருந்தான்?

2. கொர்நெலியு பற்றி விளக்கம் என்ன?

3. உங்களைப் பற்றி உங்கள் நண்பர்களும், குடும்பமும் என்ன கூறுகின்றன.?

**<u>நாள் 3</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 10:9-18, லேவி 17:10-14, லேவி 11

1. இப்பகுதிகளில் என்ன வார்த்தைகள் திரும்ப, திரும்ப பயன்படுத்தப்படுகின்றன.?

2. எந்த சம்பவம் யூதர்களும், புறதேசத்து மக்களும் ஒன்றாக உணவருந்தலாம் என்று கூறுகிறது.?

3. இன்று கர்த்தர் உங்களிடம் என்ன பேசுகிறார்.?

4. யூதர் என்று தன்னைக் கருதிக்கொண்ட பேதுரு புரிந்து கொள்ள இயலாதது என்ன?

5. பேதுருவை வழிநடத்திய வசனம் எது?

6. எந்த வசனம் எல்லா மனிதரையும் நேசிக்க வேண்டும் என்று பேதுருவுக்கு சொன்னது.

**<u>நாள் 4</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 11:1-18

1. எருசலேமிலிருந்து பேதுருவுக்கு எதிர் நின்ற யூதக் கிறிஸ்தவர்களின் விமர்சனங்கள் என்ன?

2. பரிசுத்த ஆவியின் பாகுபாடற்ற தன்மை என்ன? வசனம் 1:17

3. பேதுருவைக் கேட்டவர்களின் பதில் என்ன? வசனம் 2:11,18

4. விமர்சனங்கள் வரும் போது நாம் என்ன செய்ய வேண்டும்.?

5. நம்மைப் போல் அல்லது வேறு விதமான மனிதர்களை குறித்து யாக் 2:1 கூறுவது என்ன?

6. சிலரை விரும்பியும் சிலரை விரும்பாமலும் இருக்க காரணம் என்ன?

**நாள் 5**

வாசிக்க அப்போஸ்தலர் 11:19-26

1. அந்தியோகியா சபை எப்படி உருவானது?

2. ஏன் எருசலேம் சபை பர்னபாவை அந்தியோகியாவுக்கு அனுப்பியது?

3. பர்னபா அந்தியோகியாவிற்கு யாரை அழைத்துச் சென்றார்?

4. எவ்வளவு காலம் பர்னபா சவுலுடன் அந்தியோகியாவில் இருந்தார்.

5. அந்தியோகியாவில் சீஷர்களுக்கு வழங்கப்பட்ட பெயர் என்ன?

6. உபா 13:1-5 உபா 18:20-22, ஒப்பிட்டு உண்மைத் தீர்க்கதரிசியை பெயர் தீர்க்கதரிசியிடமிருந்து பிரித்துப் பார்ப்பது எப்படி என்று கூறுக

**நாள் 6**

**பாடம் :** "புறதேசத்துக்கு கிருபை"

**பகுதி :** அத்தியாயம் 9:32-43, மற்றும் 10-11

**முக்கிய வசனம்** அப்போஸ்தலர் 10:34-35 "தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல, எந்த ஜனத்தானாயினும் அவருக்கு பயந்திருந்து நீதியை சரிசெய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன்."

**பாடவாக்கியம்** : புறதேசத்து சபையாருக்கு பேதுருவின் பிரசங்கம்

வாழ்வு நெறி : திருச்சபை சரீரத்தின் ஐக்கியத்தில் வேற்றுமைகள் ஒற்றுமை ஒற்றுமையாகின்றன.

**சுருக்கம்**

அத்தியாயம் 9 இரண்டு அற்புதங்களோடு முடிகிறது. லித்தா ஊராளாகிய ஐனேயாவிற்கு கிடைத்த சுகம் மற்றும் தொற்காள் உயிரோடு எழுதல்

இவ்விரண்டும் பலரை இரட்சிப்புக்குள் கொண்டு வந்தது. ஆண்டவருடைய இரண்டாம் வருகையின் போது நம்முடைய கண்ணீர் யாவும் துடைக்கப்படும் நம்பிக்கை இதனால் எழுகிறது.

அத்தியாயம் 10 புதிய ஏற்ப்பாட்டின் மிக முக்கியமான பகுதி கொர்நேலியுவின் ஜெபம் மற்றும் பேதுருவின் மனமாற்றம் யூதருக்கும், புறதேசத்தாருக்கும் இடையே நின்ற ஒற்றுமையை சீர்க்குலைய வைத்தபடி செய்தது. கொர்நேலியு ஒரு நூற்றுக்கு அதிபதி ரோமச் சேவகன் செசரியா மிக முக்கியமான படைத்தளம், மேல் நாடுகளுக்கு மக்கள் சென்று வரும் கப்பற்தளம் கொர்நேலியு புறதேசத்தான் காரியம் நடைபெறும் என்று தேவதூதனால் கூறக்கேட்டான். பேதுருவும், சுத்தம், அசுத்தம், என்ற பிரிவினைகளை விட்டு ஒழிக்க கர்த்தரால் ஏவப்படுகிறான். கர்த்தர் தந்த தரிசனத்தை குறித்து யோசித்துக் கொண்டிருக்கையில் கொர்நேலியுவையும் அவன் உறவின் முறையாரையும் சந்திக்கிறான். தவிர அவர்களோடு ஆறுபேர்களும் சென்றிருந்தார்கள்.(11:12) யூதருக்கு புறதேசத்தாருடன் சாப்பிடுவது தீட்டு. கர்த்தர் தீட்டை ஒழிக்கிறார். பேதுருவும் கொர்நேலி குடும்பத்திற்க்கு ஞானஸ்நானம் கொடுத்த பின்பு சில நாள் கொர்நெலியுவின் வீட்டில் தங்கவும் செய்தான். கர்த்தருக்கு முன்பாக எந்த மனிதனும் தீட்டு இல்லை. யுதரும் கிரேக்கரும், ஒன்றே என்பதைப் பேதுரு புரிந்துகொண்டான் பரிசுத்த ஆவியானவர் கொர்நேலியு குடும்பத்தார் மேலும் இரங்கியிருந்தார்கள்.

அன்றைய தினம் வரை விருத்த சேதனமில்லாமல் எந்த புறதேசத்தாருக்கும் யூதராக மாற்றம் பெறுவதில்லை. (பார்க்க யாத் 12: 43-48) இந்த நிலைப்பாடு உடைக்கப்படுகிறது. கர்த்தர் சகல மக்களுக்கும் கர்த்தரே என பேதுரு உணர்கிறார். சுவிஷேம் புறதேசத்திற்க்கு சென்று (அப் 10:44-46, 11:1-3, 18) புறதேசமாகிய அந்தியோகியாவில் தானே கிறிஸ்தவர்கள் என்ற பெயர் சீஷர்களுக்கு சூட்டப்பட்டது. கிறிஸ்து அவர்களே மாறுபாடுள்ள மாற்றியமைக்கப்படும் இயேசுவின் சரீரத்தால்,

**அப்போஸ்தலர்**

**பாடம் ஏழு** : அத்தியாயம் 12

பாடவாக்கியம் : ஏரோது சபையைத் துன்பப்படுத்துகிறான் ஆனால் சுவிசேஷம் பரவுகிறது.

**நாள் 1**

வாசிக்க அப்போஸ்தலர் 12:1-11

1. இந்த அத்தியாயத்தில் கூறப்படும் துன்பங்கள் என்ன?
2. யாக்கோபு எவ்விதம் கொலை செய்யப்படுகிறார்?
3. அப் 12:3, யோவான் 12:42-43 பார்க்க யாரை ஏரோது பிரியப்படுத்தப் பார்க்கிறார்.

**நாள் 2**

வாசிக்க அப்போஸ்தலர் 12:5-12

1. பேதுரு சிறையில் இருக்கும் போது சீஷர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர்.?
2. அவர்கள் எப்படி ஜெபம் செய்தனர்.?
3. ஜெபத்தின் வல்லமை என்ன?
4. ஜெபத்தைக் குறித்து கீழ்க்கண்ட வசனங்கள் என்ன கூறுகின்றன?
   (அ) ரோமர் 8:28
   (ஆ) எபே 6:18
   (இ) கொலோ 4:2

**நாள் 3**

வாசிக்க அப்போஸ்தலர் 12:6-17

1. சிறையில் பேதுருவின் நிலை என்ன?

2. பேதுருவின் சிறைவிடுதலை பற்றி கூறுக?

3. பேதுரு விடுதலை பெற்றபின்பு ஜெபம் செய்துக் கொண்டிருந்தவர்களின் எதிர் விசை என்ன?

4. மாற்கு 9:24-ல் ஒப்பிடுக.

5. உங்கள் விசுவாசத்தை வர்த்திக்க ஜெபம் செய்யுங்கள்.

**நாள் 4**

வாசிக்க அப்போஸ்தலர் 12:18-19

1. பொழுது விடிந்தவுடன் நடந்தது என்ன?

2. ஏன் ஏரோது அசிரியா செசரியாவை விட்டு சென்றார்.?

3. கர்த்தரை சில செயல்களை விசுவாசிக்க இயலாது போகும் போது என்ன கூறுவோம்?

**நாள் 5**

வாசிக்க அப்போஸ்தலர் 12:20-25

1. ஏரோது, அகிரிப்பா, பெரிய ஏரோதின் பேரன் ஏரோதுவைப் பற்றி மக்கள் கூறியது என்ன?

2. ஏரோதுவை மக்கள் புகழ்ந்து பாடின பின்பு ஏரோதுவுக்கு என்ன நிகழ்ந்தது.?

3. ஏரோது மீதான நியாயத்தீர்ப்பின் மூலம் கர்த்தரின் பண்புகள் எவை?

4. ஏன் திருச்சபை வளர்ந்தது?

**நாள் 6**

**பாடம் 7** : "மாற்றங்கள்"

**பகுதி** : ஏரோது ராஜா அக்காலத்திலே சபையிலே சிலரைத் துன்பப்படுத்த தொடங்கினான். (12:1)

**பாடவாக்கியம்** : ஏரோது சபையைத் துன்பப்படுத்துகிறான் சுவிசேஷமோ பரவுகிறது.

**வாழ்வு நெறி** : சாத்தானின் சதிகளை காட்டிலும் கர்த்தரின் நோக்கமே பெரியது.

**சுருக்கம்**

அத்தியாயம் 12-ல் ஒரு புதிய அடுத்த நிலைக்கு எடுத்து செல்கிறது. எருசலேமிலிருந்து சுவிசேஷம் அந்தியோகியா போகின்றது. அங்கிருந்து உலகின் பல பகுதிகளுக்கும் சுவிசேஷம் சென்றது. பின்னர் எருசலேம் மையப்புள்ளியாக என்றும் அமையவில்லை, யூதகிறிஸ்தவர்கள் விருத்தசேதனத்தை தொடர்ந்து பின்பற்றினாலும் புறதேசத்து கிறிஸ்தவர்களுக்கு விருத்தசேதனம் முதன்மையான சடங்காக வில்லை, விருத்தசேதனம் வலியுறுத்தப்பட்டிருப்பின் சுவிசேஷம் பரவியிருக்காது. பேதுருவிடமிருந்து பவுலுக்கு சுவிசேஷ தலைமை மாறியிருக்காது. பவுல் பின்னர் அப்போஸ்தலராக, எழுத்தாளராக மாறிவிடுகிறார்.

இந்த அத்தியாயம் துன்பத்தில் துவங்குகிறது. யுதருக்கு பிரியமானது, ஏரோதுக்கும் பிரியமாயிருக்கிறது. யாக்கோபை கொலை செய்த ஏரோது பேதுருவையும் கொலை செய்ய விரும்புகிறான். ஆனால் திருச்சபை கூடி பேதுருவின் விடுதலைக்கு ஜெபிக்க தேவதூதனால் பேதுரு விடுவிக்கப்படுகிறார்.

பின்னர் ஏரோது தன்னைக் குறித்து தம்பக்கம் அடிக்க அடிக்கப்படுகிறான். அவன் புழுப்புழுத்து இறந்தான் என வேத வசனம் கூறுகிறது. அத்தியாயம்: 12:2 இப்படிப்பார்ப் போம்.

1. ஏரோதுவினால் யாக்கோபின் கொலை
2. பேதுருவின் கைது
3. பேதுருவின் விடுதலை
4. ஏரோதுவின் சாவு
5. திருச்சபை வளர்ச்சி

இந்த வசனங்களை கூர்ந்து நோக்கினால் பலவற்றையும் நாம் நோக்குகிறோம். பேதுருவை மீட்க யாக்கோபு இறக்கிறார். ஏரோது தண்டிக்கப்படுகிறார். ஆனால் யாக்கோபின் மரணத்தை கர்த்தர் அனுமதிக்கிறார். கர்த்தரின் வசனம் பெருகிற்று வாசிக்கிறோம், சபையும், சபையாரும் கொல்லப்பட்டார்கள் துன்பப்படுத்தப்பட்டார்கள் ஆனால் சபை தொடர்ந்து வளர்ந்ததே வரலாறு. ஏன் யாக்கோபின் மரணம் ஏன் பேதுருவின் சிறையிருப்பு அவருடைய ஒளி படிப்படியாக இருளை மேற்க்கொண்டது. இந்த உண்மையில் தொடரலாம் நாம் சரீர கண்களில் நாம் திருச்சபையின் வளர்ச்சியை சட்டென பார்க்க இயலாது. உணரலாம். உணர்ந்தும் வருகிறோம்.

*சாத்தானின் திட்டத்தைக் காட்டிலும் சாத்தானின் நோக்கமே மேலானது.*

## அப்போஸ்தலர்

**<u>பாடம் எட்டு</u>** : அத்தியாயம் 13-14

**<u>பாடவாக்கியம்</u>** : பவுலும் பர்னபாவும் தம்முடைய முதல் மிஷனரி பணிக்கு செல்கின்றனர். துன்பங்கள் மத்தியில் வல்லமையையும், அநேகருக்கு இரட்சிப்பையும் தருகின்றது.

**<u>நாள் 1</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 13:1-12

1. அந்தியோகியா நகரச் திருச்சபையில் உள்ள தலைவர்கள் யார்? யார்?
2. கர்த்தர் அவர்களிடம் என்ன பேசினார்.?
3. மிஷனரி ஊழியத்திற்கு சென்ற மூன்று பேர் யார்?
4. பாப்போவில் அவர்களுக்கு நேரிட்ட சவால் என்ன?
5. நமக்கு எதிர் நிற்க்கும் சக்தி எது?
6. யார் இயேசுவின் வசனத்தை ஏற்றுக்கொண்டார்கள்?

**<u>நாள் 2</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 13:13-41

1. யார் அவர்களை விட்டுப் பிரிந்து சென்றது?
2. கர்த்தருடைய ஜனத்திற்க்கும் அவர்களுக்கும் கர்த்தர் செய்த நன்மைக்கும், உரிய பவுலின் பிரசங்கம் என்ன?
3. விசுவாவில்லாத மக்களை குறித்து பவுல் கூறுவது என்ன(வசனம் 4)

4. மேசியாவைப் பற்றி பவுல் கூறுவது என்ன?

5. சுவிசேஷத்தை வெறுக்கும் ஆட்களைப் பற்றி பவுலின் பார்வை என்ன?

6. பவுலின் பிரசங்கத்தில் உங்களைத் தொட்டது என்ன?

**<u>நாள் 3</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 13:42-52

1. அடுத்த ஒய்வு நாளில் நிகழ்ந்தது என்ன?

2. பவுலுக்கும் பர்னபாஸ்க்கும் விரோதமாக எதிரிகளை தூண்டிவிட்டது யார்?

3. நகரத்தை விட்டு புறம்பே தள்ளிவிடப் பட்ட போது பவுல் - பானபாஸின் பதில் என்ன?

4. உங்கள் வாழ்வில் எதிர்ப்புகளை எப்படி சந்திக்கிறீர்கள்?

**<u>நாள் 4</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 14:1-7

1. இக்கோனியாவில் சுவிசேஷத்திற்கு யார் செவிகொடுத்தார்கள்.?

2. பவுல் பர்னபாவின் ஊழியம் பற்றி வசனம் என்ன கூறுகிறது?

3. இக்கோனியாவில் ஊழியத்தின் மேன்மை என்ன?

4. இக்கோனியாவை விட்டு ஏன் சென்றனர்?

5. இக்கோனியாவை விட்டு எங்கு சென்றார்கள்?

**நாள் 5**

வாசிக்க அப்போஸ்தலர் 14:8-28

1. தாயின் வயிற்றினின்றும் உடல் ஊனமுற்றவராய் இருக்க மாற்று திறனாளியின் சுகப்படுதல் குறித்து கூறுக?

2. மெய்யான கர்த்தரைப் பற்றி கூறும் போது படைபிக்கப்பட்ட உலகை குறித்து ஏன் பவுல் பேசுகிறார்.?

3. பவுலின் பிரசங்கத்திற்கு பதில் என்ன? சாதகமற்றும் பாதக விளைவுகளை கூறுக?

4. தெர்பைபையினின்று வந்து பவுலுடன் இருந்த நண்பர்கள் யார்?(அப் 20:4,பிலி 2:19-21)

5. எதிர்ப்பின் மத்தியில் கர்த்தருடைய வேலையைக் கூறுக?

6. பவுலும் அவரது நண்பர்களும் புதிய விசுவாசிகளை எவ்விதம் பலப்படுத்தினார்கள்?

**நாள் 6**

**பாடம் 8 :** "பவுலின் முதல் மிஷ்னரிப் பயணம்"

**பகுதி :** அத்தியாயம் 13-14

**முக்கிய வசனம்** : அப்போஸ்தலர் 13:47 நீர் பூமியின் கடைசி பரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன்

**பாடவாக்கியம்** : பவுலும், பர்னபாவும் முதல் மிஷனரிப் பயணம் சென்றனர், துன்பத்தில் வல்லமையையும், பலருக்கு இரட்சிப்பையும் கொண்டு வந்தனர்.

**வாழ்வு நெறி** : கர்த்தரையும் அவரது குமாரனையும் மறுப்பது நித்திய விளைவுகளை ஏற்ப்படுத்தும்.

**சுருக்கம்**

அப் 12-ல் குறிப்பிட்ட படி பேதுருவின் அற்புதமான விடுதலைக்கு பிறகு பவுலைப் பற்றிய குறிப்புகள் கூறப்படுகின்றன. பர்னபாவின் துணை பவுலுக்கு அதிகமாய் இருந்தது. பர்னபாவைப் பற்றி அப் 4:36-ல் வாசிக்கிறோம். தன் சொத்துக்களையெல்லாம் விற்று திருச்சபைக்கு கொடுத்தவனாக அவரைப் பற்றி வாசிக்கிறோம். பவுலை சகோதரர்களிடம் சேர்க்க முயற்சி எடுத்தவர் அவரே, பவுலைக் குறித்து அனைவரும் பயப்பட்ட போது பர்னபா முன்னின்று பவுலுக்கு ஆதரவாக இருந்தார். இங்கும் 13-ம் அதிகாரத்தில் பர்னபாவின் உதவியை பவுலுக்கு பார்க்கிறோம். இருவரும் தொடர்ந்து இணைந்து பணி செய்தனர். பவுலை தலைவராக மாற்றியதே பர்னபாதான். நமக்குள் இருக்கும் திறமையை சிலரே கண்டறிந்து நம்மை உயர்த்துகின்றனர். பர்னபாவுக்கு அப்படிப்பட்ட திறமை இருந்தது. பர்னபா சீப்புரு தீவு யூதன் சீலா முன்பு சபையைத் துன்புறுத்திய பரிசேயன் பர்னபா இளைஞர். சீலா வயதில் மூத்தவர் மனாயீன் ஏரோதின் வளர்ததலில் இருந்தவர். பிறகு லூசியஸ் பின்னர் நைஜர் சேர்ந்த சீமோன். இவர் இயேசுவின் சிலுவையைச்சுமந்த சீமோனாக இருக்கலாம் (லூக்கா 23:26). எல்லா வயதிலும் மக்கள் தம்மை உயர்வாகக்காட்டிக்கொள்ளவும், தனித்தவராக் காட்டிக்கொள்ளவும் முயல்கின்றனர். ஆனால் கர்த்தரின் வார்த்தை இந்த நிலையைத்தாண்டி அனைவரும் ஒற்றுமையாக இருக்க விரும்புகின்றது. கொலேசயர் 3:11 கூறுகிறது.

*“அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை, புறஜாதியானென்றும் புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்.”*

ஆதித்திருச்சபை மக்கள் பல்வேறு இன மொழி கலாச்சாரட் உடையவர்களாயிருப்பினும் அவர்கள் ஒன்றாய் இருந்தார்கள். வசனம் 2 கூறுகிறது, அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது தான் பர்னபாவையும், சவுலையும் (பவுல்) நான் அழைத்த ஊழியத்திற்கு அவர்ளை பிரித்து அனுப்பும் படி பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். நீங்கள் உங்கள் சொந்த மண்ணில் இல்லாது பவுலையும், பர்னபாவையும் போல் ஊழியம் செய்யலாம். பல சமயம் பர்னாபாவையும் போல் அங்கீகாரம் இல்லாமல் இருக்கலாம். பவுல் பர்னாபவின் சாட்சி உங்களுக்கு உதவும்.

பாப்போ நகரம் : (அப்போஸ்தலர் 13:4-14) மாற்கு யோவானை அழைத்துக்கொண்டு சவுலும் பர்னபாவும் சாலமி சிற்றாலயத்தில் பேசினார்கள். பின்னர் பாப்போ தீவில் சென்றபோது பர்யேசு என்ற மாயவித்தைக்காரனை பார்த்தனர் சவுலின் கையினின்று தன் சொந்த சுயநலத்திற்கு அதிபதியை மாற்ற விரும்பினான். பவுல் அதைக்குறித்து பேசும்போது எல்லா கபடமும் எல்லா பொல்லாங்கும் நிறைந்தவனே பிசாசின் மகனே நீதிக்கெல்லாம் பகைவனே என்கிறார். பொய் தீர்க்கதரிசி பார்வையை இழக்கிறான் அவன் தடுமாறி கைலாகு கொடுக்கிறவர்களை தேடினான். இப்போது மாற்கு பவுலைவிட்டு எருசலேமிற்கு திரும்பி போகிறார்.

இக்கோனியா : அப் 13:51-14:5 வரை பெர்கே பிசீதியா தாண்டி கலாத்தியா, நாடு செல்கின்றனர். அங்கே இக்கோனியா உள்ளது. இதுவே இன்றைய துருக்கி. அழகான நகரம் பசுமையான பண்ணைகளும் பழத்தோட்டங்களும் நிறைந்தது. அங்கே யூதருக்கும் புறஜாதிகளுக்கும் பிரசங்கம் செய்கின்றனர். தைரியமாக பேசுகின்றனர். கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்தார் ஆனாலும் நகரம் இரண்டாக பிரிந்தது யூதரின் பெரும் துன்பத்தினால் லீஸ்திரா சென்றனர்.

லீஸ்திரா: 14: 6-20 இது பிற இன மக்கள் வாழ்ந்த பகுதி. எனவே தொழுகை கூடம் இல்லாததால் தெருவிலே உரையாற்றினர். கால் வழங்காத மனிதர் நடந்ததும், தெய்வங்கள் மனித உருவில் வந்துள்ளனர் என்றெண்ணி பவுலுக்கும் பர்னபாவுக்கும் பூமாலைகளுடன் மாடுகளை கொண்டு வந்து பலியிட விரும்பினர். அனைத்தையும் படைத்த கடவுளே வணக்கத்துக்குரியவர் என்றும் தாங்கள் எளிய மனிதர்களே என்றும் கூறி தடுத்துவிட்டனர். தவறான வழிபாடுகளிலிருந்து அவர்களை நிறுத்தினர். பிசிதியாவிலுள்ள அந்தியோகியாவிலிருந்து யூதர்கள் பின்தொடர்ந்து வந்து பவுலை கல்லெறிந்து கொல்லும்படி மக்களை தூண்டி விட்டனர். கல்லெறிதலில் மயங்கி விழுந்த பவுலைக்கண்டு. அவர் இறந்து விட்டார் என்றெண்ணி நகருக்கு வெளியே அவரை இழுத்துப் போட்டனர். சீடர்கள் அவரை சூழ்ந்து நின்ற போது அவர் எழுந்து நகரினுள் சென்றார். மறுநாள் அவர் பர்னபாவுடன் தெர்பைக்கு புறப்பட்டுச் சென்றார்.

தெர்பை : 14: 21 அந்த நகரில் அவர்கள் நற்செய்தி அறிவித்து பலரை சீடராக்கிய பின் ஒரே நாளில் அங்கிருந்து புறப்பட்டு விட்டனர். சீரியாவிலுள்ள அந்தியோக்கியர் 14: 21-28 ஆபத்துகளும். குறைவுகளும் இருந்தாலும் சொந்த ஊர் திரும்பி விடவில்லை. அந்தியோகியாவுக்கு திரும்பும் வழிகளில் இருந்த

ஊர்களில் புதிய சீடர்களை சந்தித்து ஆறுதல் படுத்தி. ஊக்கப்படுத்தி, பலப்படுத்தவும் அக்கறைப்பட்டனர். லீஸதிரா. இக்கோனியா ஆகிய நகரங்களிலிருந்து புதிய ஆட்களை பராமரிக்கும் பொறுப்பினை பவுல் அங்கிருந்த மேய்ப்பர்களுக்கு கொடுத்தார். பிலிப்பியில் இருந்த திருச்சபைக்கு எழுதிய திருமுகத்தில். எல்லாச்சூழ்நிலைகளிலும் நல்லாயனாகிய கிறிஸ்துவே புதிய விசுவாசிகளை வலுவூட்டிக் காப்பாற்றுவார் என்கிறார். “உங்களுக்குள் இத்தகைய நற்செய்தியை தொடங்கியவர் கிறிஸ்து இயேசுவின் நாள்வரை நிறைவுறச்செய்வார் என்று நம்புவதாய் குறிப்பிடுகிறார் (பிலி: 1:6). நாங்கள் உங்களிடையே இருந்தபொழுது, தாய் தன் சேயைப் பேணி வளர்ப்பது போல். கனிவுடன் நடந்துகொண்டோம் (1தெசலோ: 2 7, 8) என்று பவுல் குறிப்பிடுகிறார். கடவுள் கொடுத்த வேலையை நிறைவா செய்து விட்டனர். அந்தியோகியா திரும்பியதும் தங்களது இரண்டாண்டு திருப்பணியின் மாட்சியை பகிர்ந்து கொண்டனர். கடவுள் எவ்வாறு பல நகரங்களில் தங்களை பயன்படுத்தினார் என்பதை விவரித்தனர். பிறகு சிறிது நாள்கள் ஓய்ந்திருந்தனர்.

*கர்த்தரை வெறுப்பதும் அவர் குமாரனைப் புறக்கணிப்பதும் நித்திய விளைவுகளை ஏற்படுத்தும்.*

**அப்போஸ்தலர்**

**பாடம் ஒன்பது** : அத்தியாயம் 15

**பாடவாக்கியம்** : விருத்தசேதன நியாயப்பிரமாணக்கட்டளைக்கு புறஜாதிகள் கட்டுப்பட வேண்டுமா வேண்டாமா என்று சபை விவாதிக்கிறது. பவுலுக்கும் பர்னாவுக்கும் இடையே யோவான் மாற்க்கை குறித்து கருத்து வேறுபாடு ஏற்படுகிறது.

**நாள் 1**

வாசிக்க அப்போஸ்தலர் 15:1-3

1. யூதம்சார்ந்த விசுவாசிகளுக்கும், புறஇன விசுவாசிகளுக்கும் இடையே வந்த முரண்பாடு என்ன?
2. பவுலும், பர்னபாவும் யூத சமய விசுவாசிகளுக்கு ஒத்துப்போனார்களா?
3. யார் பவுலுடனும், பர்னபாவுடன் எருசலேமிற்கு சென்றது?

**நாள் 2**

வாசிக்க அப்போஸ்தலர் 15:4-11

1. எருசலேமிற்கு பவுலும், பர்னபாவும் வந்துசேர்ந்த போது எருசலேமில் அவர்களை வரவேற்றது யார்?
2. விசுவாசிகள் விருத்தசேதனம் பண்ணவேண்டுமென எந்த யூதர்கள் வற்புறுத்தினர்?
3. பேதுரு எப்படி அந்தப்பிரிவினரை எதிர்கொண்டார்?
4. பேதுரு கூறுவது என்ன? எவ்வாறு ஒரு மனிதன் இரட்சிக்கப்படுகிறான்?

**<u>நாள் 3</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 15:12-21

1. புற இனத்தவரை ஏற்றுக்கொள்வதுபற்றி யாக்கோபு என்ன கூறுகிறார்?

2. என்ன தீர்க்கதரிசனம் அந்நாளில் நிறைவேறினது? (பார்க்க ஆமோஸ் 9:11-12, எரேமியா 12:5, ஏசாயா 45:21)

3. யாக்கோபை (இயேசுவின் சகோதரரை) எவ்வாறு ஒரு தலைவருக்கு ஒப்பிடுவீர்கள்?

4. கருத்து வேறுபாடுகளை நீக்க யாக்கோபின் ஆலோசனை என்ன?

**<u>நாள் 4</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 15:22-35

1. அந்தியோகியாவிற்கு அப்போஸ்தலர்கள் அனுப்பிய ஆட்கள் யார்?

2. எப்படிப்பட்ட மனிதர்கள் இவர்கள்?

3. அந்தியோகியா சபையில் வாசிக்கப்பட்ட கடிதம் என்ன கூறுகிறது?

4. புதிய விசுவாசிகளை எவ்விதம் கையாளுகிறீர்கள்?

5. எருசலேமிற்கு வந்தவர்கள் எப்படி ஊழியம் செய்தார்கள்?

**<u>நாள் 5</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 15:36-40

1. இன்னொரு மிஷனெரிப்பயணத்திற்கு பவுல் ஏன் விருப்பம் கொண்டார்?

2. பவுலுக்கும், பர்னபாவுக்கும் ஏற்பட்ட கருத்து வேற்பாடு என்ன?

3. இந்தக்கருத்து முரண்பாடுகளால் வந்த சாதக, பாதக, அம்சங்கள் என்ன?

4. இது எவ்விதம் உங்களைப்பாதிக்கிறது?

<u>**நாள் 6**</u>

<u>**பாடம் 9**</u> : “சீடர்களுக்குள் விவாதம்”

(இரண்டாம் அப்போஸ்தலப்பயணம்)

<u>பகுதி :</u> அத்தியாயம் - 15

<u>**திறவுகோல் வாக்கியம**</u> : நம்பிக்கையில் அவர்களுடைய உள்ளங்களைத் தூய்மைப்படுத்தினார். நமக்கும் அவர்களுக்கும் இடையே அவர் எந்த வேறுபாடும் காட்டவில்லை.

<u>**பாடவாக்கியம் :**</u> பிற இனத்தவர் மோசேயின் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர்களா என்று திருச்சபையும். பர்னபாவும், பவுலும், யோவான், மாற்கு பற்றியும் விவாதத்தில் ஈடுபட்டனர்.

<u>**வாழ்க்கை நெறி**</u> : விசுவாசிகள் வாழும் முறையே அவர்கள் கடவுளால் தெரிந்து எடுக்கப்பட்டவர்கள் என்பதைக் காட்டும்.

<u>**சுருக்கம்**</u>

பர்னபாவும் பவுலும் அந்தியோகியாவிலிருந்து எருசலேம் வந்ததும் மகிழ்ச்சியோடு சபையாரால் வரவேற்கப்பட்டனர். விசுவாசிகளுள் பரிசேயக் கட்சியை சேர்ந்த சிலர் பிற இனத்தவர் விருத்தசேதனம் செய்யப்பட்ட பிறகே சபையில் சேர்க்கப்படவேண்டும் என்று கூறினர். பேதுரு. கடவுளின் செயல்பாடுகள் அனைத்து இன மக்களுக்கும் பொதுவாக உள்ளது என்பதை விவரித்தார். மேலும் நம்பிக்கையால் அவர்களுடைய உள்ளங்களை தூய்மைப்படுத்தினார். நமக்கும் அவர்களுக்கும் இடையே அவர் எந்த வேறுபாடும் காட்டவில்லை. ஆகவே நம் மூதாதையரோ நாமோ சுமக்க இயலாத நுகத்தை இப்போது நீங்கள் இந்த சீடருடைய கழுத்தில் வைத்து ஏன் சோதிக்கிறீர்கள்? என்றார். பவுலும் பர்னபாவும் எவ்வாறு அரும்

அடையாளங்களையும் அருஞ்செயல்களையும்மக்களிடம் தம் அருளினால் நடப்பித்தார் என்பதை விவரித்தார். பிறகு இயேசுவின் சகோதரனான யாக்கோபு எழுந்து. கடவுள் எவ்வாறு பிற இனத்தவரையும் தெரிந்து கொண்டார் என்பதை (ஆமோஸ்: 9 11-12) இறைவாக்கினரின் சொற்கள் வழியாக விளக்கினார். தனது மிகுந்த ஞானத்தினாலே, உடனே பர்னபா பவுல் வழியாக அந்தியோகியா சபைக்கு கடிதம் கொடுத்தனுப்பவும் ஏற்பாடு செய்தார். ஆனால், சிலைகளுக்கும் படைக்கப்பட்டவை தீட்டுப்பட்டவை. கழுத்து நெரிக்கப்பட்டு செத்தவை. இரத்தம் ஆகியவற்றை தவிர்க்குமாறு எழுதியனுப்பினார் (15: 20).

பிறகு பவுல் தமது முதல் அப்போஸ்தலப் பயணத்தில் தோற்றுவித்த சபைகளை சந்திக்க பர்னபாவை அழைத்தார். பர்னபா, யோவான், மாற்குவை உடன் அழைத்து போக வேண்டும் என்று சொன்னார். ஆனால் பவுல் பம்பிலியாவை விட்டு அகன்று எருசலேமுக்குப் போன யோவான் மாற்குவை உடன் அழைத்துச் செல்ல விரும்பவில்லை. இதனால் அவர்களிடையே கடுமையான விவாதம் எழுந்தது. ஆனால் யோவான் மாற்கு ஏன் சென்றார் என்பதற்கு பதிலில்லை. ஒருவேளை. வீட்டைக் குறித்த நினைவு வந்திருக்கலாம், அல்லது பயணம் உடலுக்கு ஒத்துக் கொள்ளாமல் போயிருக்கலாம் அல்லது பவுலின் தலைமைத்துவம் பிடிக்காமல் உறவினரான பர்னபாவுடன் அவருக்கு உதவியாக இருப்பது பிடிக்காமல் போயிருக்கலாம் என்ன காரணம் என்பதற்கு விளக்கமில்லை. ஆனால் இன்னொரு வாய்ப்பு கொடுக்கும்படி பர்னபா கேட்டதற்கு. பவுல் மறுக்கிறார். பிறகு பர்னபா ஜான் மாற்கையும். பவுல் சீலாவையும் சேர்த்துக் கொண்டு நற்செய்திப் பயணத்தை தொடர்ந்தனர். யோவான் மாற்குக்காக சண்டையிடும் பர்னபா, அவரைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டு தான் அவருக்காக பேசினார். ஏனெனில் பிறகு புதுப்பிக்கப்பட்ட மற்றும் மன்னிக்கப்பட்ட மனிதனாக பவுலே அவரை உடன் வைத்துக் கொள்கிறார். நற்கனிதரும் மரமாக மாறுகிறார். தன் உடன் பணியாளர் என்று கொலோ: 4: 10 லும், பிலே: 24லும் மிகுந்த பயனுள்ள பணி செய்தவர் என்று 2 தீமொத்: 4 11 லும் குறிப்பிடுகிறார். அந்த மாற்குதான் நற்செய்தி நூலையும் எழுதினார். பர்னபாவை போன்றவர்களுக்காக கடவுளுக்கு நன்றி செலுத்துவோம்.

***விசுவாசிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும், வாழ்க்கை பரிசுத்தமாக வேண்டும்.***

# அப்போஸ்தலர்

**பாடம் 10** : அத்தியாயம் 16-17

**நாள் 1**

வாசிக்க அப் 16:1-10

1. தீமோத்தேயுவின குடும்ப பின்னணி என்ன?
2. இந்த இரண்டாவது மிஷனரி பயணத்தில் பவுலுடன் சென்றது யார்?
3. ஆசியாவில் பரிசுத்த வசனத்தை தடை பண்ணினவர் யார்?
4. கர்த்தர் அவர்களுடைய திட்டத்திற்கு என்னென்ன மாற்றுத் திட்டங்கள் வைத்திருந்தார்?
5. உங்களுக்காக கர்த்தர் வைத்திருக்கும் திட்டம் என்ன?
6. வசனம் 10ல் திடீரென்று நாங்கள் என்று வருவதை கவனிக்கவும்?

**நாள் 2**

வாசிக்க அப்போஸ்தலர் 16:11-41

1. ஆற்றங்கரையில் பவுலுக்காக யார் காத்திருந்தார்கள்?
2. பவுல் கூறும் செய்தியை கேட்ட லீதியாள் என்ன செய்தாள்?
3. அங்கே அவர்களுக்கு நேர்ந்த எதிர்ப்பு என்ன, அதை எப்படி மேற்கொண்டார்கள்?
4. உங்கள் வாழ்வில் உங்களுக்கு நேர்ந்த எதிர்ப்பின் மத்தியில் நித்திய மகிழ்ச்சி வந்த வரலாற்றை கூறுங்கள்?

5. நகரத்தை விட்டு புறப்படும் முன்பு பவுல் என்ன செய்தார்?

**நாள் 3**

வாசிக்க அப்போஸ்தலர் 17:1-15

1. தெசலோனிக்கியா பட்டணத்திற்கு வந்த போது அவர் என்ன கற்றுக் கொடுத்தார்?

2. பல்வேறு மக்களிடம் இருந்து அவர்களுக்கு வந்த பதில் என்ன?

3. பிரச்சினைகளை அவர்களுக்கு கொண்டு வந்தவர்கள் யார் யார்?

**நாள் 4**

வாசிக்க அப்போஸ்தலர் 17:10-15

1. இரவிலே பவுலையும் சீலாவையும் அனுப்பி விட்டவர்கள் யார்?

2. பெரோயா மக்களின் குணத்தைக் குறித்து கூறுக?

3. பெரோயாவில் வசனம் பேசப்பட்டபோது அங்கேயும் வந்து தொந்தரவுகள் தந்தவர்கள் யார்?

4. பெராயாவில் தங்கி விட்டவர்கள் யார் யார்?

**நாள் 5**

வாசிக்க அப்போஸ்தலர் 17:16-34

1. அத்தேனே பட்டணத்தில் பவுல் சீலாவுக்காகவும் தீமோத்தேயுவுக்காகவும் காத்திருந்த போது நேர்ந்தது என்ன?

2. அத்தேனே பட்டணத்து மக்களை பற்றி கூறுக?

3. அவர்கள் கடவுளை பற்றி என்ன எழுதியிருந்தனர்?

4. கர்த்தர் படைக்கப்பட்ட பொருளில் இல்லை ஆனால் அவரே படைத்தவர் என்று கூறும் வசனம் எது?

5. கர்த்தர் சமீபமாய் இருக்கிறார் என்று கூறும் வசனங்கள் எவை?

6. கர்த்தரே உலகை அசைக்கிறவர் என்கிற வசனம் எது?

7. எல்லைகளையும் காலங்களையும் குறிக்கிற தேவன் என்று கூறுகிற வசனம் எது?

8. மனந்திரும்ப வேண்டுமென்று கட்டளையிடும் வசனம் எது?

9. சிலைகளை பொருள்களை கடவுளாக வணங்க கூடாது என்று கூறுகிற வசனம் எது?

10. கர்த்தர் நியாயந்தீர்ப்பார் என்று கூறுகிற வசனம் எது?

11. இந்த வசனங்களில் எது உங்களுக்கு மிகவும் பிடித்தமானது?

**<u>நாள் 6</u>**

**<u>பாடம் 10</u>** : "எல்லாருக்கும் எல்லாமாம்" இரண்டாம் மிஷனரி பயணம்

**<u>பகுதி :</u>** அத்தியாயம் - 16-17

**திறவுகோல் வாக்கியம்** : 1 கொரிந்தியர் 9: 22-23 எப்படியாவது ஒருசிலரையேனும் மீட்கும்படி நான் எல்லாருக்கும் எல்லாமானேன். நற்செய்தியில் வரும் ஆசியில் பங்கு பெற வேண்டி நற்செய்திக்காக எல்லாவற்றையும் செய்கிறேன்.

**<u>பாட வாக்கியம்</u>** : பவுல் யூதர்களிடம் பேசும்போது இறைவாக்கு நூல்களிலிருந்தும் கிரேக்கரிடம் பேசும்போது படைப்பிலிருந்தும் மேற்கோள்காட்டுகிறார்.

**<u>வாழ்க்கை நெறி</u>** : பாதுகாக்கும் வல்லமை கடவுளை போற்றும்போது வருகிறது.

**<u>சுருக்கம்</u>**

அத்தியாயம்: 16 1-3 பவுல் மீண்டும் லீஸ்திரா சென்றபோது நன்மையான ஒன்று வெளியே வந்தது. கிரேக்க குடும்பத்திலிருந்து வந்த தீமோத்தேயுவை சந்தித்தனர். அங்கிருந்த சகோதர சகோதரிகளிடையே நற்சான்று பெற்றவர். வெளிவேடமற்ற உறுதியான நம்பிக்கை கொண்டிருந்த தீமோத்தேயுவின் பாட்டியாகிய லோவிசாளிடமிருந்து தீமோத்தேயுவுக்கும் அத்தகைய நம்பிக்கை கடந்து வந்துள்ளது. வயதானவர்கள் இளைஞர்கள் வாழ்வில் நன்மையானவற்றை பின்பற்ற ஏற்படுத்தும் தாக்கம் போற்றுதற்குரியது. உங்கள் வாழ்க்கையில் கடவுளின் அரசுக்குரிய நன்மைகள் வயதானவர்களால் தாக்கம் ஏற்படுத்தியது உண்டா?

தீமோத்தேயுவை தன்னுடன் அழைத்துச் செல்ல பவுல் விரும்பி, அவரது தந்தை கிரேக்கராக இருந்தபடியால், எருசலேம் திருச்சபைமன்ற விதிமுறைகளின்படி அவருக்கு விருத்தசேதனம் செய்வித்தார். அவர்கள் ஆசியாவுக்கும், பித்தினியாவுக்கும் பணி செய்ய போக விடாமல் தூரோவாவியர் தடுத்திருந்தார். பிறகு அவர்கள் துரோவாவில் இருக்கும்போது இரவில் பவுலுக்கு மாசிதோனியர் ஒருவர் வந்து. மாசிதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யும் என்று வேண்டினதாக காட்சி கண்டார். அதையொட்டி அவர்கள் துரோவாவிலிருந்து புறப்பட்டனர்.

சுமத்திரா தீவு, நெயாப்போலி ஆகிய நகரங்களைக் கடந்து மாக்கதோனியா பகுதியான பிலிப்பி சென்று அங்கு பல நாள்கள் தங்கினர். வழக்கம்போல், இயேசுவின் நற்செய்தி அறிவிக்க

தொழுகைக்கூடத்தை நாடினர். ஆனால் ஆற்றோரம் கூடி இறைவேண்டல் செய்யக் கூடிய பெண்களை சந்தித்தனர். அங்கு செந்நிற ஆடை விற்கும் வணிகரான லீதியாளை சந்தித்தனர். மீட்பின் செய்தியை கேட்குமாறு கடவுளே உள்ளத்தை திறந்தார். பிலிப்பு நகரில் ஆலயம் கட்டவும் அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு நற்செய்தி பரவவும் உதவினார். பெண்கள் கூடி இறைவேண்டல் செய்ததன் விளைவு இது. லீதியாளைப் போல் நீங்களும் உண்மைக்காக பசியோடு இருக்கிறீர்களா? பிலிப்பி நகரில் ஒருநாள் அவர்கள் இறைவேண்டல் செய்யும் இடத்துக்குச் சென்று கொண்டிருக்கும்போது, குறிசொல்லும் ஆவியைத் தம்முள் கொண்ட அடிமை பெண் ஒருவரை சந்தித்தனர். அப்பெண்ணை அடிமையாக வைத்திருந்தவருக்கு அவரால் மிகுந்த வருவாய் கிடைத்தது. அப்பெண் பவுலையும் மற்றவர்களையும் கண்டதும், ‘‘இவர்கள் உன்னத கடவுளின் பணியாளர்கள். மீட்பின் பணியை உங்களுக்கு அறிவிக்கிறவர்கள்’’ என்று பல நாள்களுக்கு உரக்க கூறிக்கொண்டிருந்தாள். பவுல் எரிச்சல் கொண்டு அந்த ஆவியை அப்பெண்ணை விட்டு விரட்டினார். நாம் கடவுளுக்கென்று நற்செய்திப்பணிகளை செய்யும்போது சாத்தான் நமக்கு எதிராக வேலை செய்வான் என்பது நமக்கு ஓர் பெண்ணும் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும் என்று லேவி: 20: 27 இல் வாசிக்கிறபடி, இத்தகைய சக்திகள் நாம் கடவுளை நெருங்கி சேர இயலாதபடி இருளிலேயே நம்மை வைத்திருக்கும். எனவே கடவுள் இவற்றை வெறுத்து அதைச் செய்வோரை தண்டிக்கிறார். குறி சொல்லும் ஆவி பிடித்திருந்த பெண்ணை வைத்து, வருமானம் பார்த்தவர்கள், அப்பெண் குணமானதைக் கண்டு மகிழாமல், வருமானம் போயிற்றென்று சினமுற்று, பவுலையும் சீலாவையும் பிடித்துக் கொண்டு போய், ஆட்சியாளரிடம் ஒப்புவித்து, பொய் குற்றச் சாட்டுகளை அவர்கள் மீது சுமத்தினர். உடனே மக்கள் அவர்களை தாக்கினர். மேலும் அவர்களை நன்கு அடித்து சிறையிலிட்டனர். அங்கு கருத்தாய் காவல் செய்யுமாறு காவலர் ஒருவருக்கு கட்டளையிட்டனர். உள் சிறையிலடைக்கப்பட்ட பவுலும் சீலாவும் நள்ளிரவில் புகழ் பாடி வேண்டினர். திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டு சிறைக்கூடத்தின் அடித்தளமே அதிர்ந்து. கதவுகள் அனைத்தும் திறந்தன.

அனைவரின் விலங்குகளும் கழன்று விழுந்தன. சிறைக்காவலர் விழித்தெழுந்து, சிறைக்கூடத்தின் கதவுகள்

திறந்திருப்பதைக் கண்டு கைதிகள் தப்பியோடியிருப்பார்கள் என்றெண்ணி, தன் வாளை உருவி தற்கொலை செய்துகொள்ள முயன்றார். பவுல் உரத்த குரலில் அவரைக் கூப்பிட்டு, ‘‘நீர் உமக்கு தீங்கு எதுவும் செய்து கொள்ளாதீர், நாங்கள் அனைவரும் இங்கே தான் இருக்கிறோம்’’ என்றார். சிறைக்காவலர் அவர்களை வெளியே அழைத்து வந்து, ‘‘பெரியோரே, மீட்படைய நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார். பின்பு அவர்கள் ஆண்டவரின் வார்த்தையை அவருக்கும் அவர் வீட்டில் இருந்தோர் அனைவருக்கும் அறிவித்தார்கள். அவர் அவர்களின் காயங்களைக் கழுவினார். வீட்டுக்கு அழைத்துச் சென்று உணவு பரிமாறினார். முழுக்குடும்பமே மீட்கப்பட்டது. பொழுது விடிந்ததும் அவர்களை விடுவிக்குமாறு கூறினார்கள். ஆனால் பவுல் நாங்கள் உரோமக் குடிமக்கள், முறையான தீர்ப்பு இன்றியே எங்களை நையப்புடைத்துச் சிறையில் தள்ளினர். இப்போது யாருக்கும் தெரியாமல் எங்களை வெளியேற்றப் பார்க்கிறீர்களா? அவர்களே வந்து எங்களை வெளியே அழைத்துச் செல்லட்டும்’’ என்றார். இச்செய்தியை தலைமை நடுவர்களுக்கு அறிவித்தார்கள். அவர்கள் உரோமைக் குடிமக்கள் என்று கேட்டதும், நடுவர்கள் அஞ்சினார்கள். உடனே அவர்கள் வந்து மன்னிப்புக் கோரி, தங்கள் நகரை விட்டுப் போகுமாறு வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் சிறையிலிருந்து வெளியேறி, லீதியாளின் வீட்டுக்கு சென்றார்கள். அங்கு சகோதரர் சகோதரிகளைக் கண்டு. அவர்களை ஊக்கப்படுத்திய பின் அங்கிருந்து புறப்பட்டுசென்றார்கள். தெசலோனிக்கேயாவிலிருக்கும்போது. தொடர்ச்சியாக மூன்று ஓய்வுநாட்களுக்கு தொழுகைக்கூடம் சென்று, மறைநூலை அடிப்படையாக வைத்து யூதர்களுடன் வாதாடினர். ஆனால் யூதர்கள் பொறாமை கொண்டு சில பொல்லாதவர்களையும் சேர்த்துக்கொண்டு, பவுலையும் சீலாவையும் எதிர்த்தனர். பிறகு எதிர்ப்புகளின் நடுவே அங்கிருந்து புறப்பட்டு பெரோயா போய் சேர்ந்தனர். பெரோயா வந்தடைந்ததும் யூதருடைய தொழுகைக்கூடத்துக்குச் சென்றனர். அங்கிருந்தவர்கள் பரந்த மனப்பான்மையுடையவர்கள். முழு ஆர்வத்துடன் இறைவார்த்தையை ஏற்றுக்கொண்டு அவர்கள் கூறுவன மறைநூலுடன் ஒத்துள்ளதா என

நாள்தோறும் ஆராய்ந்து வந்தார்கள். ஆனால் தெசலோனிக்கேயாவின் யூதர்கள் பெரேயாவில் இறைவார்த்தையை

அறிவிப்பதை அறிந்து அங்கேயும் வந்து மக்கள் கூட்டத்தினரைக் குழப்பிக் கலக்கம் உண்டாக்கினர். சீலாவும் தீமோத்தேயுவும் அங்கேயே தங்கினர். ஆனால் பவுலை ஏதெனசு வரை அழைத்துச்சென்றுவிட்டனர். ஏதென்சு நகரில் அழைத்து வந்த பிற இன மக்கள் எந்த வித மறைநூல் அறிவுமின்றியிருந்தனர். ஆனால் அவர்கள் நடுவே நின்று படைப்பிலிருந்து கடவுள் மனுக்குலத்திற்கு என்னென்ன செய்து வந்தார் என்பதை விவரித்தார். ஏனெனில் மக்கள் அறியாமையில் வாழ்ந்த காலத்தில் கடவுள் இதனைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் இப்போது எங்குமுள்ள மக்கள் யாவரும் மனம் மாற வேண்டும் என்று அவர் கட்டளையிடுகிறார். ஏனென்றால் ஒரு நாள் வரும் அப்போது தாம் நியமித்த ஒருவரைக் கொண்டு அவர் உலகத்துக்கு நேர்மையான தீர்ப்பு அளிப்பார். இறந்த அவரை உயிர்த்தெழச்செய்ததன் வழியாக இந்நம்பிக்கை உறுதியானதென எல்லாருக்கும் தெளிவுபடுத்தினார் (17: 30-31). சிலர் நம்பிக்கைகொண்டு அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். பிறகு பவுல் ஏதென்சை விட்டு கொரிந்துக்கு போய்ச்சேர்ந்தார்.

பற்பல மக்கள் கூட்டத்தினருக்கு மத்தியில் எவ்வாறு பேச வேண்டும் என்பதை பவுல் நன்கு அறிந்து கொண்டதை 16, 17 ஆம் அத்தியாயத்திலிருந்து தெரிந்து கொள்கிறோம். விருத்தசேதனத்துக்கு எதிராக எருசலேமில் பவுல் பேசினாலும், திமோத்தேயுவுக்கு யூதர்களால் எந்த பிரச்சினையும் வந்துவிடக்கூடாது என்பதற்காக அவருக்கு விருத்தசேதனம் செய்வித்தார். மேலும் அவரது உரையை கேட்கிறவர்களுக்கு ஏற்றாறபோல் தனது அணுகுமுறையை மாற்றிக்கொண்டார். யூதர்களுக்கு பேசும்போது அவர்களுடைய மூதாதையர் தொடங்கி பேசினார். பெரும்பாலும் அவர்களுடைய தொழுகைக்கூடங்களையே பயன்படுத்தினார். பிற இன மக்களிடம் பேசும்போது அறிவு வயப்பட்டும். படைப்பிலிருந்து கடவுளின் என்ன திட்டம் என்ன என்பதையும் விளக்கிப் பேசினார். மேலும் தூயாவியாரே தன்னை துணிவாலும் ஆற்றலாலும் நிரப்பி கேட்போர் இதயங்களை பக்குவப்படுத்தி கடவுளின் மாபெரும் நற்செய்தியை ஏற்கும்படி செய்கிறார் என்றும் நம்பினார்.

***துதியே வலிமை தருகிறது.***

**அப்போஸ்தலர்**

**பாடம் பதினொன்று** : அத்தியாயம் 18-19

**பாடவாக்கியம்** : ஆசியா முழுவதும் பிரசங்கம் செய்து பவுல் அற்புதம் செய்கிறார். தீமைகளுக்கு எதிர்த்து நிற்கிறார்.

**நாள் 1**

வாசிக்க அப்போஸ்தலர் 18:1-23

1. ஆக்கில்லா பிரிஸ்கில்லாவுக்கும், பவுலுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

2. பவுலுக்கு கர்த்தர் தந்த வாக்குத்தத்தம் என்ன?

3. எவ்வளவு காலம் பவுல் கொரிந்துவில் தங்கினார்?

4. கொரிந்துவில் கர்த்தர் பவுலுக்கு தைரியம் கொடுத்தது போல இன்றும் உங்களுக்கு தைரியம் தருகிறாரா?

**நாள் 2**

வாசிக்க அப்போஸ்தலர் 18:24-28, 19:1-7

1. எபேசுவில் என்ன பேசினான்?

2. எபேசு மக்களிடம் பவுல் என்ன கூறினார்?

3. இயேசுவே இரட்சகர் என்று அறிந்த போது அவர்கள் என்ன செய்தார்கள்?

4. பெந்தகோஸ்தே நாளில் நடந்தது போல் என்ன சம்பவங்கள் நடந்தன?

**நாள் 3**

வாசிக்க அப்போஸ்தலர் 19:8-12

1. பவுலின் உபதேசங்கள் கேட்ட யூதர்கள் என்ன செய்தார்கள்?

2. இரண்டு வருட காலமாய் யார் கர்த்தருடைய வசனத்தைக்கேட்டார்கள்?

3. பவுலின் கைகளால் செய்யப்பட்ட அற்புதங்கள் என்ன?

**நாள் 4**

வாசிக்க அப்போஸ்தலர் 19:13-22

1. இயேசுவின் அதிகாரம் இல்லாமல் பேய்களை விரட்டியவர்களுக்கு என்ன நிகழ்ந்தது?

2. மாயவித்தைக்காரர்களின் பொருள்கள் என்ன? (பார்க்க உபாகமம் 18:9-14)

3. உங்களை சுற்றியுள்ள சமுதாயத்தில் நீங்கள் என்ன பார்க்கிறீர்கள்?

4. இப்படிப்பட்ட விஷயங்கள் நடக்கிறதா?

5. எபேசியர்கள் தங்களை எப்படி சுத்திகரித்துக்கொண்டார்கள்?

6. ஆசியாவில் பவுல் எவ்வளவு காலம் செலவழித்தார்?

**நாள் 5**

வாசிக்க அப்போஸ்தலர் 19:23-41

1. கர்த்தரின் வழியை எதிர்த்து தெமேத்திரியு என்ன செய்தான்?

2. தன் பிரச்சனைகளை கையாள தெமேத்திரியு என்ன செய்தான்?

3. பவுல் கூட்டத்திற்குள் போக விரும்பிய போது யார் அவனை தடைசெய்தார்கள்?

4. பட்டணத்து சம்பிரதியானவனின் வேலை என்ன?

5. பவுலின் ஊழியப்பயணத்தை கர்த்தர் எப்படிக்காத்தார்?

**நாள் 6**

**பாடம் 11 :** "அறுப்புக்கு பணியாளர்கள் நிறைய சேர்க்கப்பட்டனர்"
2-ஆம் அப்போஸ்தலப்பயண முடிவும், மூன்றாம் அப்போஸ்தலப்பயண துவக்கமும்

**பகுதி :** அத்தியாயம் - 18, 19

**திறவுகோல் வாக்கியம்** : ரோமர் 1: 16 "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.

**பாட வாக்கியம்** : பிற சீடர்களோடு சேர்ந்து பவுல் செய்தியளிக்கிறார். அருஞ்செயல்களும் ஆசியா முழுவதும் அவர்கள் வழியாக நடக்கிறது. தீமையை எதிர்கொள்கின்றனர்.

**வாழ்க்கை நெறி** : விசுவாசிகளுக்குள் உறையும் தூயாவியாவைர் கடவுளின் அதிகாரத்தை பெறவும் உதவுகிறார்.

**<u>சுருக்கம்</u>**

கிரீசின் குறிப்பிட்ட நகரங்களில் ஒன்றான கொரிந்துவுக்கு வந்து தன் அப்போஸ்தலப்பயணத்தை தொடர்கிறார். வணிகம் மற்றும் முறையற்ற வாழ்க்கை நெறிகொண்ட நகரம் தான் கொரிந்து. ஆனால் அங்கும் பவுலுக்கு ஆக்கில்லா அவர் மனைவி பிரிஸ்கில்லா ஆகியோரது நட்பு கிடைத்தது. தொடக்கத்தில் பவுல் அவர்களுடன் தங்கி அவர்கள் செய்த தொழிலான கூடாரம் செய்தலை அவரும் அவரகளுடன் செய்தார். மேலும் சீலாவும்

தீமோத்தேயுவும் பிலிப்பு நகரிலிருந்த சிலருடைய பண உதவியுடன் வந்து சேர்ந்தனர் (2 கொரி: 11: 8-9 பிலி: 4: 15). கொரிந்துவில் பவுல் இருக்கும்போது தெசலோனிக்கருக்கு இரண்டு திருமுகங்களை எழுதினார். மேலும் தொழுகைக்கூடத்தலைவரான கிறிஸ்பு என்பவர் தம் வீட்டார் அனைவரோடும் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டார். கொரிந்துவுக்கு இரண்டு திருமுகங்களை எழுதினார். கல்லியோன் என்பவர் அகாயா நாட்டின் ஆட்சியாளராக இருந்தபோது யூதர்கள் ஒருமித்து பவுலைத்தாக்கி, அவரை நடுவர் மன்றத்துக்குக் கூட்டிக்கொண்டு வந்து “இவன் திருச்சட்டத்துக்கு எதிரான முறையில் கடவுளை வழிபடுமாறு மக்களை தூண்டி விடுகிறான்” என்றார்கள். யூதர்களே இது சொற்களையும் பெயர்களையும் உங்கள் திருச்சட்டத்தையும் பற்றிய சிக்கலாய் இருப்பதால் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் இதில் நடுவராக இருக்க நான் விரும்பவில்லை” என்று கூறி ஆட்சியாளர் அவர்களை நடுவர் மன்றத்திலிருந்து துரத்திவிட்டார் (18: 12 -17). உடனே தலைவரான சொஸ்தேனையைப் பிடித்து நடுவர் மன்றத்துக்கு முன்பாக அடித்தனர். ஆனால் கல்லியோ எதையும் பொருட்படுத்தவில்லை.

பவுல் பலநாள்கள் கொரிந்துவிலுள்ள சகோதரர் சகோதரிகளிடம் தங்கியிருந்த பின்பு. ஆக்கில்லா பிரிஸ்கில்லா ஆகியோருடன் சிரியா , எபேசு சென்றார். பவுல் நேர்த்திக்கடனை நிறைவேற்ற கெங்கிரேயா நகரில் முடிவெட்டிக்கொண்டார். ஒருவேளை அது சரேய (தலைமுடி வளர்த்தல்) விவாதத்திற்குரியதாக இருந்திருக்கலாம். பிறகு எபேசுவில் ஆக்கில்லா பிரிஸ்கில்லா இணையரை விட்டு விட்டு செசரியா, அந்தியோகியா, கலாத்தியா, பிரிகியா ஆகிய நகரங்களுக்கு கடந்து சென்றார்.

அப்பொல்லோ என்ற யூதர் எபேசு வந்து இயேசுவின் நற்செய்தியை பிழையற அறிவித்தும் கற்பித்தும் வந்தார். அவர் சொல்வன்மை மிக்கவரும் மறைநூல்களில் புலமை வாய்ந்தவருமாயிருந்தார். ஆனால் அவர் யோவான் கொடுத்த திருமுழுக்கை மட்டுமே அறிந்திருந்தார். அவர் தொழுகைக்

கூடத்தில் துணிவுடன் பேசி முடித்ததும், ஆக்கில்லா இணையர் அவரை அழைத்துக்கொண்டு போய், கடவுளின் நெறியை திட்டவட்டமாக விளக்கினர். அவர் அகாயாவுக்குப் போக விரும்பிய போது சகோதர சகோதரிகள் அவரை ஊக்கப்படுத்தி, அவரை ஏற்றுக்கொள்ளுமாறு சீடருக்கு கடிதம் எழுதினார்கள். அவர்அங்கே சென்றபோது இறையருளால் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டிருந்தவர்களுக்கு பெரிதும் துணையாயிருந்தார். ஏனெனில் அவர் வெளிப்படையாகவும் சிறப்பாகவும் யூதர்களிடம் வாதாடி, “இயேசு மேசியா” என்று மறைநூல்களின்மூலம் எடுத்துக்காட்டினார்.

அப்பொல்லோ கொரிந்தில் இருந்தபோது பவுல் மலைப்பாங்கான பகுதி வழியாக எபேசு வந்தார். அங்கு அவர் சில சீடர்களைக்கண்டு அவர்களை நோக்கி “நீங்கள் நம்பிக்கை கொண்ட போது தூயாவியால் ஆட்கொள்ளப்பட்டீர்களா?” என்று கேட்டார். அதற்கு அவர்கள், “தூய ஆவி என்னும் ஒன்று உண்டு என்று கூட நாங்கள் கேள்விப்பட்டதில்லையே” என்றார்கள். அவ்வாறெனில் நீங்கள் எந்த திருமுழுக்கைப் பெற்றிருக்கிறீர்கள்? எனப் பவுல் கேட்க அவர்கள், “நாங்கள் யோவான் கொடுத்த திருமுழுக்கை பெற்றோம்” என்றார்கள். அப்பொழுது பவுல், “யோவான் மனம் மாறிய மக்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்து, தமக்குப்பின் வரும் இயேசுவிடம் நம்பிக்கை கொள்ளுமாறு கூறினார்” என்றார். இதைக் கேட்ட மக்கள் ஆண்டவராகிய இயேசுவின் பெயரில் திருமுழுக்குப் பெற்றனர். பவுல் அவர்கள் மீது கைகளை வைத்ததும், தூய ஆவி அவர்கள் மீது இறங்கியது. அப்பொழுது அவர்கள் பரவசப் பேச்சு பேசினர். இறைவாக்கும் உரைத்தனர். அங்கிருந்த சீடர்களுடன் மேலும் இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்து, அவர்களுக்கு போதிக்கவும் கற்பிக்கவும் செய்தார். பவுல் தீமோத்தேயு, எரஸ்து இருவரையும் மக்கதோனியாவுக்கு அனுப்பிவிட்டு அவர் ஆசியாவில் சிறிது காலம் தங்கினார். தெமேத்திரியு என்னும் பெயருடைய தட்டான், தியானாளின் கோவிலின் வடிவத்தை வெள்ளியில் செய்வித்து. அதினால் கைவினைஞர்களுக்கு மிகுந்த வருவாய் கிடைக்கச் செய்தார். ஆனால் பவுல் மனித கையால் செய்யப்பட்டவை தெய்வங்களல்ல என்று சொல்லி அவர்களது வருமானத்தை கெடுப்பதாக கூறி நகரில் குழப்பத்தை ஏற்படுத்தினார். நகரில் இருந்த அரங்கத்தில் கூடி மக்கள் பவுலுக்கு

எதிராக உரக்கக் கத்தினர். நகர ஆணையர் மக்களை அமைதிப்படுத்தி பேசினார். “நீங்கள் இழுத்து வந்திருக்கும் இவர்கள் கோவில்

கொள்ளைக்காரர்களோ, நம்முடைய தேவதையை படித்துரைப்பவர்களோ அல்ல. எனவே தெமேத்திரியுவுக்கும் அவரோடுள்ள கைவினைஞர்களுக்கும் யார் மீதாவத வழக்கு உண்டானால் அவர்கள் நீதிமன்றம் கூடும் நாள்களில், ஆட்சியாளர்களிடம் அவர்களைப் பற்றி முறையிடட்டும் என்று அவர் கூற சபையைக் கலைத்து விட்டார். பவுல் உள்ளே செல்ல முயன்ற போது, சீடர்கள் அவரைத் தடுத்துவிட்டனர். கடவுள் நகர ஆணையாளை பயன்படுத்தி, பவுலின் பணிக்கு தடைவராமல் பாதுகாத்தார்.

***பரிசுத்த ஆவியானவர் நமக்கு அதிகாரத்தை தருகிறார்.***

**பாடம் பன்னிரண்டு** : அத்தியாயம் 20

**பாடவாக்கியம்** : பவுல் எபேசு சபையை ஆசீர்வதிக்கிறார். எருசலேமிற்கு தனக்கு வைத்திருக்கிறதை எதிர்பார்த்து பயனிக்கிறார்.

**நாள் 1**

வாசிக்க அப்போஸ்தலர் 20:1-6

1. கிரேக்க தேசத்தில் எவ்வளவுகாலம் பவுல் இருந்தார்?
2. பவுலுடன் பயணம் செய்தவர்கள் யார் யார்?
3. உங்களைச் சுற்றி கர்த்தரின் மனிதர்கள் உண்டா?

**நாள் 2**

வாசிக்க அப்போஸ்தலர் 20:7-12

1. துரோவா பட்டணத்தில் நடந்த அற்புதம் என்ன?
2. உங்கள் சொந்த வார்த்தையில் பவுலின் ஊழியம் பற்றி எழுதுக?
3. பவுலின் வாழ்வினின்றும் மற்றவர்களை கவனித்துக் கொள்வது எப்படியென்று அறிகிறோம்?

**நாள் 3**

வாசிக்க அப்போஸ்தலர் 20:13-24

1. எப்போது எருசலேமிற்கு வர பவுல் திட்டமிடுகிறார்?
2. எபேசுவில் பவுல் ஊழியம் செய்ய ஏன், எப்படி பவுல் கஷ்டப்பட்டார்?

3. ஆசியாவில் உள்ள யூதருக்கும், புற இனத்தவர்களுக்கும் பவுலின் செய்தி என்ன?

4. எருசலேமில் அவனுக்காக காத்திருப்பது எது என்று பவுல் குறிப்பிடுகிறார்?

**<u>நாள் 4</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 20:25-34

1. எதற்கு அழைக்கப்பட்டாரோ அதை முடித்தேன் என்று பவுல் கூறிக்கொள்ளக்காரணங்கள் என்ன?

2. எருசலேமிற்கு செல்லும் முன்பதாக என்ன தைரியங்களை அங்குள்ளவர்களுக்கு பவுல் தருகிறார்?

3. உங்கள் வாழ்வில் உங்கள் ஊழியம் எத்தகையதாக இருக்கிறது?

**<u>நாள் 5</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 20:35-38

1. பவுல் பகிர்ந்து கொண்ட கர்த்தரின் வார்த்தை எது?

2. பவுலும் எபேசியரும் எப்படி ஊழியங்களை செய்தனர்? (36-38)

3. ஏன் இந்தப் பிரிவு நிகழ்வு உணர்ச்சிகாரணமானது?

4. இயேசுவைப்போல பவுல் இருப்பதால் பவுலைப் போல நீங்களும் இருக்க ஏன் விரும்புகின்றீர்கள்?

**நாள் 6**

**பாடம் 12 :** “எபேசு சபையிலிருந்து விடைபெறும் பவுல்”

**பகுதி** : அத்தியாயம் - 20

**திறவுகோல் வாக்கியம்** : அப்போஸ்தலர் 20:24 ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்.

**பாட வாக்கியம்** : எபேசு சபைக்கு ஆசி கூறும் பவுல் எருசலேமில் அவருக்கு நிகழவிருக்கும் அனைத்துக்கும் தன்னை ஆயத்தப்படுத்துகிறார்.

**வாழ்க்கை நெறி** : பிறர் உண்மையாய் பின்பற்ற மாதிரியாய் இருங்கள்.

**சுருக்கம்**

குழப்பம் ஓய்ந்த பின் பவுல் ஆசி மிகுந்த பணியை அமைதியாக எபேசுவில் செய்த பவுல், அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, சில சீடர்களுடன் மக்கேதோனியா, கிரீஸ் ஆகிய நகரங்களுக்கு கடந்து சென்றார் (20: 4). துடக்கத்தில் பல்வேறு குழப்பங்களில் பவுல் சிக்கினாலும் பிறகு அனைத்து சூழல்களிலும், அனைவரோடும் அனுசரித்துச் செல்லும் அவரது நடைமுறை முதிர்ச்சி அடைந்த தாய்மையை காட்டுகிறது. அதனால் எல்லாவற்றிலும் ஆண்டவரே தலையாயிருந்து, சீடர்கள் அப்போஸ்தலர்கள் அனைவரும் உடலின் உறுப்புகளிலிருந்த சபைவரை உதவினர்.

துரோவாவில் பவுல் சீடர்களுடன் நள்ளிரவு வரை பேசிக் கொண்டிருந்தார். திருச்சபையின் விடயங்கள் பலவற்றை அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை கேட்டுக் கொண்டு நன்கு தூங்கிவிட்ட இளைஞன் யூத்திகு 3- ம் மாடியிலிருந்து விழுந்ததில் இறந்து விட்டார். பின்பு பவுல் இறங்கி வந்த அவர் மீது படுத்து அணைத்துக் கொண்டு ‘‘இவர் உயிரோடுதானிருக்கிறார்’’ என்று கூறினார். பொழுது புலரும் வரை நீண்ட நேரம் அவர்களோடு

உரையாடிய பின் புறப்பட்டுச் சென்றார். உயிர் பெற்ற இளைஞரை அவர்கள் அழைத்துச் சென்று மிகவும் ஆறுதல் அடைந்தார்கள். மிலேத்துவில் இருக்கும்போது, எபேசுவுக்கு ஆளனுப்பி. திருச்சபையின் மூப்பர்களை வரவழைத்தார். ‘‘இனிமேல் நீங்கள் என் முகத்தைப் பார்க்கப்போவதில்லை’’ என்று கூறி அவர்களோடு சேர்ந்து இறைவேண்டல் செய்தனர். பிறகு

அவர்களுக்கு நல்லாலோசனை வழங்கினார். மேலும் மூன்று ஆண்டுகளாக இரவும் பகலும் இடைவிடாமல் பணிசெய்ததை எடுத்துக்கூறி மேலும் அவர்கள் பொறுப்பாக நடந்துகொண்டு திருச்சபையைக் கட்டிக்காக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். அவர்களை கடவுளின் முழக்கட்டுப்பாட்டுக்கு ஒப்புவித்த பணிசெய்ய ஏவினார். தவறான போதனைகளில் மக்கள் சிக்கி விடாத படி கண்ணும் கருத்துமாக மந்தையை மேய்க்கும்படி கேட்டுக்கொண்டார். கடவுள் அனைத்துக்கும் உரிய பலனை தருவார் என்றும் அவர்களை ஊக்குவித்தார். பின்பு எல்லாரும் பவுலைக் கட்டித் தழுவி முத்தமிட்டு கதறி அழுதனர். ‘‘இனிமேல் நீங்கள் என் முகத்தை காண்பதில்லை: என்று அவர் கூறியது அவர்களுக்கு மிகுந்த வேதனை அளித்தது. பிறகு அவர்கள் கப்பல் வரைக்கும் சென்று அவரை வழியனுப்பி வைத்தனர்.

***இதர விசுவாசிகளுக்கு முன் மாதிரியாயிருப்போம்***

# அப்போஸ்தலர்

**<u>பாடம் பதின்மூன்று</u>** : அத்தியாயம் 21:22

**<u>பாடவாக்கியம்</u>** : பவுல் எருசலேமில் கைதுசெய்யப்படுகிறார். அவரது கிருபையின் கதையை ஜனங்களுக்கு கூறுகிறார்.

**<u>நாள் 1</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 21:1-14

1. தீருவில் கப்பல் நின்றபோது பவுலுக்கு நேர்ந்ததைக்குறித்து கூறுக?
2. பிலிப்பு பற்றி கூறுக? (அப்போஸ்தலர் 21:8, 6:3-5)
3. "அகபு" என்னும் தீர்க்கதரிசி பவுலைக் குறித்து பேசியது என்ன?
4. பவுலின் பதில் என்ன? சீஷர்களின் எதிர்விசை என்ன?
5. வசனம் 13ல் உள்ள பவுலின் பண்பையும், லூக்கா 14:25-33ல் இயேசு கூறுவதையும் ஒப்பிடுக?

**<u>நாள் 2</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 21:15-26

1. அப்போஸ்தலர் 18:23 முதல் பவுலின் மூன்றாம் மிஷனரிப்பயணத்தைக் கூறுக?
2. பவுல் ஒரு நல்ல தலைவர் விளக்குக?
3. எருசலேமில் பவுலையும், அவன் தோழர்களையும் சபை எப்படி வரவேற்றது?
4. எருசலேமில் உள்ள யூத விசுவாசிகளின் மதவாதம் பிடித்தவர்களைக் குறித்து சபை மூப்பர்கள் கூறியது என்ன?

5. ஏன் பவுல் மதச்சடங்கை அனுசரித்தார்?

**<u>நாள் 3</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 21:15-26

1. பவுல் கைது செய்யப்பட்டதற்கு காரணம் என்ன?
2. ஜனங்களைக் குறித்து என்ன கூறுவீர்கள்?
3. ஏன் ஜனங்களிடம் பேச பவுல் விரும்பினார்?

**<u>நாள் 4</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 22:1-16

1. தனது மனமாற்றத்தைப்பற்றி கூறிய போது கர்த்தரைப்பற்றி பவுல் அறிந்த உண்மையாது?
2. தமஸ்கு சாலையில் பவுல் இயேசுவிடம் என்ன கேள்வி கேட்டார்?
3. இயேசுவிடம் பவுல் கேட்ட இரண்டாவது கேள்வி என்ன?
4. பவுலை கர்த்தர் ஏன் தேர்ந்தெடுத்தார்?
5. கர்த்தர் உங்களை எதற்கு தேர்ந்தெடுத்தார்?

**<u>நாள் 5</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 22:17-30

1. கலாத்தியர் 5:15-18ன் படி பவுலின் மனமாற்றத்திற்கும் எருசலேமிற்கும் அவன் போனதிற்கும் இடையே இருந்த கால இடைவெளி என்ன?

2. பவுலுக்கு ஞானதிருஷ்டி வந்த போது கர்த்தரின் செய்தி என்ன?

3. புறதேசத்து மக்களிடையே அவன் சாட்சியாய் விளங்க யார் அவனைத் தேர்வு செய்தார்கள்?

4. ஏன் பவுலை குறித்து யூதர்கள் கோபம் கொண்டார்கள்?

5. சவுக்கடியினின்றும் பவுல் எவ்வாறு தப்புகிறார்?

6. உங்கள் விசுவாசத்தினால் ஏதும் மன அதிர்வு அதைரியம் உண்டாகிறதா?

7. விசுவாசத்தில் வளர மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென விரும்புகிறீர்கள்?

8. முழு மனதுடனும் கர்த்தரைப் பின்பற்ற என்ன தடைகள் உள்ளன?

**நாள் 6**

**பாடம் 13 :** "பவுலின் கைதும் மக்கள் கூட்டம் முன்பு தன்னிலை விளக்கமும்"

**பகுதி :** அத்தியாயம் - 21 - 22

**திறவுகோல் வாக்கியம்** : அப்போஸ்தலர் 22: 15 நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கு முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய்.

**வாழ்க்கை நெறி :** எதிர்ப்புகள் கடவுள் நமக்கு செய்ததை பகிரக் கிடைக்கும் வாய்ப்புகள்

**சுருக்கம்**

21-ஆம் அத்தியாயம் பவுல் தான் போக வேண்டிய இடத்துக்குப் போகும் வழியில் தீரு நகரையடைந்து அங்கு ஏழு நாட்கள் தங்கி சீடர்களுடன் செலவிட்டதில் தொடங்குகிறது. அவர்கள் தூயஆவியால் தூண்டப்பட்டு பவுலிடம் எருசலேம் செல்ல கப்பலேற வேண்டாமெனக் கூறினர் (21: 4).

கடவுளிடம் இருந்து வந்த எச்சரிப்பாக அது இருந்தாலும் பவுல் எருசலேம் செல்ல புறப்பட்டார். அவர்கள் செசரியா வந்து, அப்போஸ்தலர் ஏழுபேரில் ஒருவரான பிலிப்புவின் வீட்டுக்குச் சென்று தங்கினர். அகபு என்னும் இறைவாக்கினர் ஒருவர் யூதேயாவிலிருந்துவந்து பவுலின் இடைக்கச்சையை எடுத்து தம் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு, "இந்தக் கச்சைக்குரியவரை எருசலேமில் யூதர்கள் இவ்வாறு கட்டிப் பிற இனத்தாரிடம் ஒப்புவிப்பார்கள். தூய ஆவியானவர்தாமே இப்படிக் கூறுகிறார்" என்றார். இவற்றைக் கேட்டு மற்ற சீடர்கள். பவுலை எருசலேமுக்குச் செல்ல வேண்டாமெனக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். அவரை அவர்கள் இணங்க வைக்க முடியாது போகவே. "ஆண்டவரின் திருவுளப்படி நடக்கட்டும்" எனக்கூறி பேசாமல் இருந்து விட்டனர். மேலும் தீரு மற்றும் செசரியா நகரத்து சீடர்களும் ஆவியாரின் ஏவுதலினால் எருசலேம் செல்ல வேண்டாம் என்று பவுலைக் கேட்டுக் கொண்டனர். இவை எல்லாவற்றிற்கும் பவுல் கீழ்ப்படியவில்லை என்பது பொருளல்ல. மாறாக கடவுள் அனைத்து துன்பங்களையும் பொறுத்துக்கொள்ள வேண்டிய வலுவை ஆற்றலை பவுலுக்குக் கொடுத்தார். துணிவோடு எருசலேம் சென்றடைந்தார். எனவே துன்பம் வரும் என்று தெரிந்தே எருசலேம் செல்கிறார். அவர்கள் எருசலேம் சென்று சேர்ந்தபோது சகோதர சகோதரிகள் அவர்களை மகிழ்வுடன் வரவேற்றார்கள். அவர் கடவுள் தன்னைக்கொண்டு பிற இனத்தாரிடம் செய்தவற்றை ஒவ்வொன்றாக விளக்கினார். அவர்கள் பிற இனத்தவர் நடுவில் வாழும் யூதர்கள் தம் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்யவேண்டியதில்லையென்றும் மோசேயின் சட்டத்தை விட்டு விலகுமாறும் பவுல் கற்றுக்கொடுப்பதாகவும் கேள்விப்பட்டிருப்பதாக சொல்லி பவுல் அறிந்திருந்து தப்ப மோசேயின் தூய சடங்கை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நான்கு சகோதரர்களுடன் சேர்ந்து கொள்ள ஆலோசனை கூறினார். பிரச்சினையினின்று அமைதியாக போகவேண்டும் என்றெண்ணி பவுலும் உடன்பட்டார். தூய்மை சடங்குகளை ஏழு நாள்கள் முடிந்து பவுல் எருசலேம் கோவிலுக்குச் சென்றார். ஆசியாவிலிருந்து வந்திருந்த யூதர் பவுலைக் கண்டு இஸ்ரயேல் மக்களே! உதவ வாருங்கள்! திருச்சட்டத்துக்கு எதிராக எல்லா இடங்களிலும் கற்பிப்பவன் இந்த மனிதன் தான் மேலும் கிரேக்கரை கோவிலுக்குள் கூட்டி வந்து இந்த தூய்மையான இடத்தை தீட்டுப்படுத்தியுள்ளான்" என்று கத்தினார்கள். நகரெங்கும் கலகம்

உண்டாயிற்று. பவுலைப் பிடித்துக் கொலை செய்ய வழி தேடினர். எருசலேம் நகரம் முழுவதும் குழப்பம் நிலவுகிறது என்ற செய்தி ஆயிரத்தவர் தலைவருக்கு எட்டியது. அவர் போர் வீரர்களையும் நூற்றுவர் தலைவர்களையும் கூட்டிக்கொண்டு ஓடி வந்தார். அவர்களைக் கண்டதும் யூதர்கள் பவுலை அடிப்பதை நிறுத்தினார்கள். ஆயிரத்தவர் தலைவர் பவுலை பிடித்து இரு சங்கிலிகளால் கட்டுமாறு ஆணை பிறப்பித்தார். கலகம் கட்டுக்கடங்காததாயிருந்ததால், அவரைக் கோட்டைக்குள் சென்றதும் பவுல் அவரிடம் அனுமதி வாங்கி பேசத் தொடங்கினார். மிகுந்த அமைதி நடுவே பவுல் எபிரேய மொழியில் பேசத் தொடங்கினார். தன்னைக்குறித்து பேசினதை பொறுமையாக கேட்டுக்கொண்டிருந்த மக்கள், அவர் பிற இனத்து மக்களுக்கு திருப்பணி செய்ய அனுப்பப்பட்டதை கேட்டதும் அவர் மீது புழுதி வாரி தூற்றி "இவனை அடியோடு ஒழியுங்கள், இவன் வாழத் தகுதியற்றவன்" என கத்தினர். மக்கள் இவ்வாறு கூச்சலிடுவதின் காரணத்தை ஆயிரத்தவர் தலைவர் அறிய விரும்பி அவரைக் கோட்டைக்குள் அழைத்துச் சாட்டைகளால் அடித்து விசாரணை செய்ய ஆணை பிறப்பித்தார். அவர்கள் அவரைச் சாட்டையால் அடிப்பதற்கென்று கட்டியபோது உரோமைக்குடிமகன் ஒருவரைச்சாட்டையில் அடிப்பது, அதுவும் முறையான தீர்ப்பின்றி அடிப்பது சட்டப்படி செல்லுமா? என்று பவுல் கேட்டார் தாம் கட்டிவைத்திருந்தவர் உரோமைக்குடிமகன் என்பதை அறிந்ததும் அவர்கள் அச்சமுற்றனர். யூதர்கள் பவுல் மீது என்ன குற்றம் சுமத்துகிறார்கள் என்பதை உறுதியாக அறிய விரும்பி மறுநாள் தலைமைக் குருக்கள்.

தலைமைச் சங்கத்தினர் அனைவரும் கூடிவருமாறு ஆயிரத்தவர் தலைவர் ஆணை பிறப்பித்தும் பவுலை சிறையிலிருந்து கொண்டு வந்த அவர்கள் முன் நிறுத்தினார். மீண்டும் தன்னுடைய உரையை பவுல் யூத சமய தலைவர்களுக்கு முன்பாக ஆற்றினார்.

***<u>எதிர்ப்புகள் கர்த்தரின் செய்தியைக்கூற உதவுகின்றன.</u>***

## அப்போஸ்தலர்

**<u>பாடம் பதின்நான்கு</u>** : அத்தியாயம் 23-24

**<u>பாடவாக்கியம்</u>** : எதிர்பார்ப்புக்கள், கலகம், மாட்டவைத்தல் ஆகியவை பவுலுக்கு எதிராக நிற்க்கின்றன.

நாள் 1

வாசிக்க அப்போஸ்தலர் 23:1-8

1. ஆலோசனை சங்கத்தாருக்கும், பிரதான ஆசாரியனுக்கும், எதிராக பவுலின் வார்த்தைகள் என்ன?
2. அனனியா ஏன் கோபப்பட்டார்?
3. அனனியாவைக் குறித்து பவுலின் வார்த்தை என்ன?(மத்23:27-28)
4. சதுசேயரின் நம்பிக்கைக்கும், பரிசேயரின் நம்பிக்கைக்கும், உள்ள வேறு பாடுகள் என்ன?

**<u>நாள் 2</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 23:9-11

1. பவுலை கர்த்தர் எப்படி உற்சாகப்படுத்தினார்?
2. கர்த்தர் பவுலுக்கு என்ன சொன்னார்?
3. யோசுவா 1:1-9-ன்படி கர்த்தர் தரும் வாக்குத்தத்தம் என்ன?
4. வாழ்வின் பல நிலைகளில் கர்த்தரின் வாக்கு என்ன?

**<u>நாள் 3</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 23:12-35

1. பவுலை கொலை செய்ய 40 யூதர்கள் எடுத்த தந்திரம் என்ன?

2. பவுலின் சகோதரி மகன் என்ன கேள்விப்பட்டார்?

3. பவுலை கர்த்தர் யூதருடைய கைகளினின்று எப்படி மீட்டார்? ஏன்

4. பவுலைக் கொண்டு போக எத்தனை பேர் தேவைப்பட்டனர்?

5. பவுலை எங்கு கொண்டு சென்றனர்? ஏன்

**<u>நாள் 4</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 24:1-13

1. பவுலுக்கு எதிரான குற்றச்சாட்டு என்ன?

2. எருசலேமிற்கு பவுல் வந்ததற்கு காரணம் என்ன சொன்னார்?

3. சிறைச்சாலையில் தன்னை தள்ளிட அவர்களின் நோக்கமென்ன என்று பவுல் எதைக் குறிப்பிடுகிறார்?

**<u>நாள் 5</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 24:14-26

1. பவுல் அறியவும், பார்க்கவும், கேட்கவும், வேண்டியது என்ன?

2. எப்படி அவன் சாட்சி ஏற்கப்பட்டது?

3. பேலிக்ஸ்சுக்கு எதனால் பயம் வந்தது?

4. பவுல் எவ்வளவு காலம் சிறையில் இருந்தார்?

5. பவுலின் சிறைக்குப் பின் கர்த்தரின் நோக்கம் என்ன?

6. கடினச் சூழலில் நீங்கள் இருக்கிறீர்களா?

**நாள் 6**

**பாடம் 14 :** **"பேலிக்ஸின் முன்பும் பவுல் தன்னிலை விளக்கமளித்தல்"**

**பகுதி :** அத்தியாயம் - 23 - 24

**திறவுகோல் வாக்கியம்** : அப்போஸ்தலர் 22:11 நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும் என்றார்.

**பாடவாக்கியம்** : பவுலுக்கு எதிர்ப்பு, கலகம், சூழ்ச்சி

வாழ்க்கை நெறி : உண்மையான பொறுமையோடு காத்திருத்தல் சாத்தியமே

**சுருக்கம்**

பவுல் தன்னுரையை, "சகோதரரே! நான் இந்நாள் வரை கடவுள் முன்னிலையில் என் மனச்சான்றுக்கிசைய முற்றிலும் நேர்மையாக வாழ்ந்து வந்தேன்" என்று தொடங்கியதும், தலைமைக்குரு அனனியா, பவுலின் வாயில் அடிக்கும்படி பணித்தார். பவுல் தலைமைக்குரு என்று தெரியாவிட்டாலும் முழுவதும் விசாரிக்காமல் அடிக்கச் சொன்னது தவறு என்றார். திருச்சட்டத்தின்படி, "உன் மக்களின் தலைவரைச் சபிக்காதே" என்று எழுதியுள்ளதாயும் சுட்டிக்காட்டினார் (வி.ப: 22: 28). பவுல் சாதகமான முறையில் ஒவ்வொரு நிலையிலும் தன்னிலையை தெளிவாக உரைக்கிறார். தலைமைக் குருவிடம் திருச்சட்டத்தின் படி என்னைத் தண்டிக்கவில்லையே என்றும் ஆயிரத்தவர் தலைவரிடம் விசாரிக்காமல் அடிக்கக்கூடாதே என்றும் நிதானமாக கேட்கிறார். தன்னைக் கொல்வதற்கு யூதர்கள் சூழ்ச்சி செய்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்து கொண்டதும் அதை ஆயிரத்தலைவரிடம் தெரிவிக்கச் சொல்கிறார். உடனே போதிய படைபலத்துடன் பவுலை பாதுகாப்பாக செசரியாவின் ஆளுநர் போலிக்ஸ்சும் அனுப்பினார். பெலிக்சும் அவரை விசாரித்துப் பார்த்தார். மேலும் பவுல் தன்னை விடுவிக்க கையூட்டுக் கொடுப்பார் என்று அதில் தான் என்ன சொல்கிறேன் என்பதையும். எருசலேமில் தன் அமைதலாய் சமயச் சடங்கை செய்து கொண்டிருந்ததையும், யூதர்களுடைய சூழ்ச்சியையும் பெலிக்சு

ஏற்காமல், எருசலேமின் பொறுப்பாளரான ஆயிரத்தவர் தலைவர் லீசியா வரும் போது மேலும் விசாரிக்கலாம் என்று சொல்லி வழக்கை ஒத்தி வைத்தார். அது வரை பவுலை காவலில் வைக்கவும் பணிவிடை செய்யும்படி அவரது உறவினர்களுக்கு

அனுமதியும் கொடுத்தார். பவுலின் சாட்சியை கேட்டு பேலிக்ஸ்சு மனமாற்றமடையாமல் போனாலும், அவ்வப்போது அவருடன் உரையாடலில் நேரம் கடத்தினார். இரண்டு ஆண்டுகள் கடந்தன. பெலிக்சுக்குப்பின் பெஸ்து ஆளுநர் பதவியேற்றார். பேலிக்சு யூதரது நல்லெண்ணத்தைப் பெற பவுலை கைதியாக விட்டுச்சென்றார்.

***பவுல் காத்திருக்கிறார் விசுவாசத்துடன்***

## அப்போஸ்தலர்

**<u>பாடம் பதினைந்து</u>** : அத்தியாயம் 25-26

**<u>பாட வாக்கியம்</u>** : பவுல் ஆளுநர்களுக்கு முன்பாகவும் ராஜாக்களுக்கு முன்பாகவும் பேசுகிறான்.

**<u>நாள் 1</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 25:1-12

1. பவுலுக்கு எதிராக நின்ற இருகுழுக்கள் யார் யார்? (அப்போஸ்தலர் 25:2-3, 23:12-45)

2. இந்த தந்திரங்களை கர்த்தர் எவ்விதம் மாற்றி அமைக்கிறார்?

3. எதற்காக பவுல் ராயருக்கு அபயமிட்டார்?

**<u>நாள் 2</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 25:13-27

1. பெஸ்து அல்லது அகிரிப்பாவுக்கு பவுலுக்கு என்ன செய்ய வேண்டுமென தெரியும்? ஏன்?

2. பவுலின் குற்றமில்லா தன்மைகுறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

3. ராயனுக்கு பவுல் அபயமிட்டதால் எங்கே அகிரிப்பா அவனை அனுப்ப வேண்டும்? ஏன்?

**நாள் 3**

வாசிக்க அப்போஸ்தலா் 26:1-15

1. இந்த வசனங்களை விளக்குக.

    அ. இயேசுவே மேசியா என்ற பவுலின் வார்த்தைஆ. யூதருக்கு இடறுதல் கல்

    இ. பவுலின் மனமாற்றத்திற்கு முந்திய நிலை?

    ஈ. பவுலின் மனமாற்றம் அதன் பின்னான காரியங்கள்?

**நாள் 4**

வாசிக்க அப்போஸ்தலா் 26:16-28

1. பவுலின் தரிசனம் என்ன?
2. பவுல் எங்கு யாருக்கு பிரசங்கம் பண்ணினான்?
3. அகிரிப்பாவின் பதில் என்ன?
4. ஏன் அகிரிப்பா பவுலை விசுவாசிக்கவில்லை?

**நாள் 5**

வாசிக்க அப்போஸ்தலா் 26:29-32

1. சாவுக்கோ சிறைக்கோ பவுல் பாத்திரமானவரா?
2. பவுலை ரோமுக்கு அனுப்புகிறவர் யார்?
3. அவருடைய அழைப்பா அது? (அப்போஸ்தலா் 9:5)

**<u>நாள் 6</u>**

**<u>பாடம் 15</u>** : “பெஸ்து முன்பும் அகிரிப்பா முன்பும் பவுல் தன்னிலை விளக்கமளித்தல்.”

**<u>பாடம் :</u>** அத்தியாயம் - 25 - 26

**<u>திறவுகோல் வாக்கியம் :</u>** 26: 16 “எழுந்து நிமிர்ந்து நில், என் ஊழியனாகவும் சாட்சியாகவும் உன்னை ஏற்படுத்தவே நான் உனக்குத் தோன்றினேன். நீ என்னைக் கண்டது பற்றியும் நான் உனக்கு காண்பிக்கப் போவதைப்பற்றியும் சான்று பகர வேண்டும்.

**<u>பாடவாக்கியம் :</u>** ஆளுநருக்கு முன்பும் அரசர்களுக்கு முன்பும் பவுல் பேசுதல் வாழ்க்கைக்கு கீழ்ப்படிதலோடு காத்திருக்கும்போது வளர்கிறோம்.”

**<u>சுருக்கம்</u>**

யூதர்கள் மீண்டும் பவுலைக் கொல்வதற்கு சூழ்ச்சி செய்தனர். யூதசமய முதன்மை குடிமக்கள் பெஸ்துவை சந்தித்து பவுலை எருசலேம் அழைத்த வந்து விசாரிக்கக் கோரினர். அப்படிவரும் வழியில் பவுலைக் கொல்ல சூழ்ச்சி செய்திருந்தனர். ஆனால் பெஸ்து செசரியாவுக்கு வந்த குற்றச்சாட்டுகளை கூறச்சொன்னார். எருசலேமுக்கு கொண்டுவர மறுத்துவிட்டார். பேலிக்சைப் போலவே செசரியாவுக்கு யூதர்கள் வந்ததும் பவுலின் விசயத்தில் அவர்களின் நல்லெண்ணத்தைப் பெற விரும்பி பவுலை எருசலேம் கொண்டுபோய் விசாரிக்க சம்மதமா என்று கேட்டதற்கு பவுல் பேரரசரே! தன்னை விசாரிக்க வேண்டும் என்றும் தான் திருச்சட்டத்துக்கும், கோவிலுக்கும், உரோமை அரசுக்கும் எதிராக எந்த தவறும் செய்யவில்லை என்று உறுதியாக தெரிவித்தார். பேரரசர் விசாரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்ட பவுலை சமாளிக்க முடியாமல் திணறிய பெஸ்து, கடைசியில் தனது நண்பர்களான அகிரிப்பா அரசன், பெர்னீக்கேயாளுக்கும் முன்பாக பவுலை நிறுத்தி விசாரித்தார். மிகுந்த பகட்டு ஆடம்பரத்துடன் ஆயிரத்தவர் தலைவர், குடிமக்கள் (அகிரிப்பாவும் பெர்னீக்சேயாளும்) ஆகிய அனைவரும் அவைக்கூடத்துக்கு வந்தார்கள். அப்போது பெஸ்து, “அகிரிப்பா அரசே! எம்மோடு இங்கு குழுமியிருக்கும் மக்களே!

இவரைப் பாருங்கள். யூதர்கள் திரண்டு வந்து என்னிடம் முறையிட்டு, இவன் இனியும் உயிரோடிருக்கக்கூடாது என்று கூச்சலிட்டனர். நான் இவர்

மரணதண்டனைக்குரிய குற்றம் ஒன்றையும் செய்யவில்லை என்பதைக் கண்டேன். ஆயினும் இவர் தன்னை பேரரசரே விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதால் அவரிடம் அனுப்பத் தீர்மானித்தேன். உங்களுக்கு முன்பாக நாம் அவரை விசாரித்தபின் எனக்கு எழுதுவதற்கு ஏதாவது கிடைக்குமென நினைக்கிறேன். ஒரு கைதியின் மேல் சாட்டப்பட்டுள்ள குற்றங்களை குறிப்பிடாமல் அவனை அனுப்புவது அறிவீனம் என்று எனக்குத் தோன்றுகிறது'', என்றார். பவுலுக்கு அத்தகைய ஆடம்பர கூட்டத்தினருக்கு நடுவில் நற்செய்தியை அறிவிக்க வாய்ப்பு கிடைத்தது. ``நம் மூதாதையருக்கு கடவுள் அளித்த வாக்குறுதியை நான் எதிர்நோக்குவதால் தான் இப்போது விசாரணைக்காக நிறுத்தப்பட்டுள்ளேன் (26: 6). தன்னுடைய யூத சமய வளர்ப்பு, கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுதல், தமஸ்குவின் பாதையில் மனமாற்றம், கிறிஸ்துவின் அழைப்புக்கு கீழ்ப்படிதல், போன்றவற்றையும் மோசேயும் இறைவாக்கினரும் உரைத்து நிறைவேறியதை யூதர்கள் ஏற்க மறுத்தல், அன்போடு நற்செய்தி ஏற்க அழைப்பு, ஆன்மாக்கள் பேரில் கிறிஸ்துவை விசுவாசித்தல் போன்றவற்றையும் மிகவும் தெளிவுடன் விளக்கினார். ஆனால் ஒருவரும் ஏற்கவில்லை. கிறிஸ்துவை குறித்த உண்மையை எடுத்தியம்புவதில் தயங்கியதேயில்லை. இருப்பினும் கடவுள் பவுலை உரோமை நகரம் நோக்கி நடத்தினார்.

***கீழ்ப்படிதலிலே நம்முடைய வளர்ச்சி நிற்கிறது***

## அப்போஸ்தலர்

**<u>பாடம் பதினாறு</u>** : அத்தியாயம் 27-28

**<u>பாடவாக்கியம் :</u>** பவுலின் ரோம நகரப் பயணம், புயல் கப்பல் உடைகிறது.

**<u>நாள் 1</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 27:1-10

1. கப்பற்தலைவன் குறித்து என்ன அறிகிறோம்?
2. பவுலுடன் பயணம் செய்த மேலும் இரு நண்பர்கள் யார் யார்?
3. பவுலின் நண்பர்களின் பெயர்கள் என்ன? அவர்களின் நட்பு குறித்து என்ன எண்ணுகிறீர்கள்? (கொலே 4:10,14, பிலமோன் 23,24)
4. நண்பர்களைக் குறித்து யோவான் கூறுவது என்ன? (யோவான் 15:12-17)
5. கப்பல் பயணம் செய்வதற்கு காலமா அது?
6. கப்பல் தலைவனுக்கு பவுல் கூறிய ஆலோசனை என்ன?

**<u>நாள் 2</u>**

வாசிக்க அப்போஸ்தலர் 27:11-14

1. மிக மோசமான புயலினால் கப்பலுக்கு வந்த சேதம் என்ன?
2. பவுலின் வார்த்தைகள் என்ன?
3. உங்கள் தைரியத்தை வழிநடத்துவது யார்?

4. சங்கீதம் 119:89 மற்றும் 2தீமோ 3:16-17 கர்த்தர் கூறும் வார்த்தைகள் என்ன?

5. எவ்வளவு பேர் கப்பலில் இருந்தனர்?

6. கப்பலில் இருந்த மக்களின் நிலை என்ன?

7. அப் 7:23-24, கர்த்தர் பவுலுக்கு சொன்ன வாக்கு நிறைவேறிற்றா?

**நாள் 3**

வாசிக்க அப்போஸ்தலர் 28:1-11

1. உடைந்த கப்பல் எங்கு நின்றது?

2. மெலித்தா தீவின் மக்கள் எப்படி வரவேற்றார்கள்?

3. தீவின் மக்களுக்கு கர்த்தர் தம்மை எப்படி வெளிப்படுத்தினார்?

4. ரோமுக்கு புறப்படும் முன்பு எவ்வளவு நாள் அங்கிருந்தனர்?

5. பவுல் எப்படி நேரத்தை செலவழித்தார்?

**நாள் 4**

வாசிக்க அப்போஸ்தலர் 28:12-29

1. பவுலை ரோமில் சந்தித்தது யார்?

2. ரோமில் பவுலின் வாழ்க்கையை கூறுக?

3. யூத மக்களுக்கு பவுல் என்ன செய்தியைக் கூறினார்?

4. பவுலின் செய்திகளுக்கு அவர்களின் பதில் என்ன?

5. விசுவாசம் இல்லாமல் மக்கள் செல்வதற்கு காரணம் என்ன?

**நாள் 5**

வாசிக்க அப்போஸ்தலர் 28:30-31

1. ரோமில் பவுல் எவ்வளவு நாள் வாழ்ந்தார்? அவருடைய செய்தியின் விளைவு என்ன?
2. பவுலின் ஆவிக்குரிய வாழ்வு குறித்து 1 தீமோ 4 என்ன கூறுகிறது?
3. பவுலின் வாழ்வைக் குறித்து என்ன பாடம் அறிகிறீர்கள்?
4. உங்கள் வாழ்க்கை பவுலின் வாழ்வினால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது?

**நாள் 6**

**பாடம் 16 :** "பவுல் ரோமை அடைதல்"

**பகுதி :** அத்தியாயம் - 27 - 28

**திறவுகோல் வாக்கியம்** : ஆகவே நண்பர்களே! மனவுறுதியுடன் இருங்கள். நான் கடவுளிடம் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். அவர் என்னிடம் சொன்னவாறே நடக்கும் 27: 25

**பாடவாக்கியம்** : பவுலின் உரோமைப் பயணம் புயலும், கப்பற்சிதைவும் அடங்கியது.

**வாழ்க்கை நெறி :** நம் வாழ்க்கைப் புயலின் நங்கூரம் கடவுளே. அவர் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார்.

**சுருக்கம்**

யூலியு என்று நூற்றுவர் தலைவரிடம் பவுல் இத்தாலி செல்லும் கப்பலில் பயணிக்க ஒப்படைக்கப்பட்டார். பல்வேறு இன்னல்கள் நிறைந்ததாக கப்பல் பயணம் இருந்தாலும் பவுலுக்கு வேண்டிய ஞானத்தையும் மனிதரின் நல்லெண்ணத்தையும் அளித்தார். பேய்ப்புயலில் கப்பல் சிக்கினாலும் அனைவரும் காப்பாற்றப்பட்டு, பவுலும் சீசருக்கு முன்பாக விசாரிக்கப்பட

வேண்டுமென ஆண்டவரின் தூதர் கூறினார். இந்த வார்த்தைகளைச்சொல்லி பவுல் தன்னுடன் பயணித்தவர்களை ஊக்குவித்தார். அவர்கள் தங்கள் சரக்குகளை இழந்து, கப்பலுடைந்து துன்புற்று மெலித்தாதீவுக்கு வந்தார்கள். அங்கு குளிராக இருந்ததால் தீமூட்டுவதற்கென பவுலும் சுள்ளிகளை பொறுக்கிச் சேர்த்துத் தீயில் போட்டபோது, ஒரு விரியன் பாம்பு சூட்டின் மிகுதியில் வெளியே வந்து, அவரது கையைப் பற்றிக் கொண்டது. அவர் கையில் பாம்பு தொங்குவதை அத்தீவினர் பார்த்தபோது ‘‘இவன் ஒரு கொலைகாரன் என்பது உறுதி, கடலிலிருந்து தப்பிக்கொண்டாலும் நீதியின் தெய்வம் இவனை வாழவிடவில்லை’’ என்று சொல்லிக் கொண்டார்கள். ஆனால் அவர் அந்த பாம்பை நெருப்பில் உதறினார். அவருக்கு கேடு எதுவும் நேரிடவில்லை. உடனே அவர் ஒரு தெய்வம் என்று சொல்லத்தொடங்கினார்கள். அத்தீவின் தலைவர் புபிலியு காய்ச்சலினாலும், வயிற்று உளைச்சலாலும் நோயுற்றுக் கிடந்தார். பவுல் அவருக்காக இறைவேண்டல் செய்ததும் நலமானார். அத்தீவில் நோயுற்றிருந்த ஓனையோரும் அவரிடம் வந்து சுகமடைந்தனர். மூன்று மாதங்களுக்குப்பிறகு அத்தீவில் ஒதுங்கியிருந்த சிதறிய கப்பலில் ஏறி பயணம் தொடர்ந்தனர். அவர்களுக்கு தேவையான அனைத்து பொருள்களையும் அம்மக்கள் கொடுத்துதவினர். அங்கு புத்தேயோலி என்னுமிடம் வந்தார்கள். அங்கு சகோதரர் சகோதரிகளை சந்தித்தார். அவர்களுடன் ஏழுநாள்கள் தங்கிய பின் உரோமை நோக்கிப் புறப்பட்டனர். பவுல் உரோமை அடைந்ததுடன் இந்நூல் முற்று பெறுகிறது. அங்கு படைவீரரின் காவலோடு வாடகை வீட்டில் தங்கி எழுதும் பணியை செய்து வந்தார். வெளியேற முடியாது, நற்செய்தியினை உலகின் எல்லைவரை எடுத்துச்செல்ல முடியாது, வரையறையுடன் கட்டுப்பட்டு, காவலுக்குட்பட்டு இருப்பினும்

பிலிப்பியருக்கு எழுதினார். ‘‘நான் கட்டப்பட்டு இருக்கிறேன், ஆனால் கடவுளின் வார்த்தைகள் கட்டப்பட இயலாதவை என்று எழுதுகிறார். ‘‘எனக்கு நேர்ந்தவையெல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயின என்றும் எழுதுகிறார் (பிலி: 1: 12). எல்லா இன்னல்கள் நடுவிலும் நற்செய்தி பரவுகிறது என்பதே தனக்கு நிறைவளிப்பதாக எழுதுகிறார். இது இவ்வாறு நடக்கிறது என்பதை இரண்டு வழிகளில் விவரிக்கிறார்.

ஒன்று - ரோமை இராணுவம் சீசரின் அரண்மனை பணியாளர்கள் ஒவ்வொருவராய் கிறிஸ்துவண்டை வருகின்றனர். பிலிப்பியர் 4:22

வீட்டுக்காவலர்கள் ஒவ்வோர் மணி நேரத்திற்கு ஒருவராக மாறுவர், அவர்கள் பேரரசின் ஆணைக்கிணங்கி பவுலுடன் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு காவலிருப்பர். அவர்கள் ஒவ்வொருவராக கிறிஸ்துவின் நற்செய்தியை கண்டுகொண்டனர். இதைத்தான் பிலி: 2: 22 இல் எழுதுகிறார். இரண்டு பவுல் மட்டுமே கைதாகி இருக்கிறார். மற்ற சகோதரர்கள் நற்செய்தி அறிவிக்கும் பணியில் மிகுந்த அலுவலில் இருக்கின்றனர், எனவே ரோமையிலிருந்து நற்செய்தி பரவுகிறது. மூன்று பவுல் நினைத்திராத ஒன்றும் நடைபெற்றது. அவர் தனது பணிக்காலங்களில் நகரங்கள்தோறும் சென்று நற்செய்தி அறிவித்து சபைகளை தோற்றுவித்தார். அதோடு நில்லாமல் இப்போது அவர் அமைதியாக எந்தவித தொந்தரவுமின்றி பல்வேறு திருச்சபைகளுக்கும் தனி ஆட்களுக்கும் கடிதங்களை எழுதுகிறார். அவர் கைதாகி இராமல், நகரங்கள் தோறும் தொடர்ந்து பயணப்பட்டுக் கொண்டே இருந்திருந்தால் இத்தனை திருமுகங்கள் நமக்கு கிடைத்திருக்காது. இந்த கடிதங்கள் இன்று வரை அதாவது திருச்சபை 20 நூற்றாண்டுகளை கடந்து வர உதவியது. ஏனெனில் ஒவ்வொரு திருச்சபையிலும் நிலவிய சூழல்களுக்கும் ஏற்றவாறு இறைவேண்டலோடு அவர் எழுதிய திருமுகங்கள் இன்னும் நமக்கு பயனுள்ள ஒன்றாக உள்ளன. முதலில் கிறிஸ்துவின் நற்செய்தியை கவர்ச்சியான சொற்களில் தன்னுடைய ஞானத்தின்படி உரைக்காமல், கிறிஸ்துவின் நற்செய்தியை தூயாவியாவைரின் முழு வல்லமையோடு தான் உரைத்ததாக கூறுகிறார் (1 கொரி: 2 3-5). உள்ளங்களில் விசுவாசத்தை தோற்றுவிக்கும் அளவுக்கு கடவுளின் வார்த்தைகள் தொடர்ந்து விதைக்கப்பட்டுக் கொண்டே இருக்க வெண்டும் (மாற்கு: 11: 22-25). கடவுளின் வாக்குறுதிகளைப் பற்றிக்கொண்டு நாம் கேட்கும்போது அனைத்துத்தடைகளும் நீங்கும். இரண்டாவது, சாத்தான் கொண்டு வரும் எதிர்ப்புகள் தவிர்க்க இயலாதவை. சில சோதனைகளும் வேதனைகளும் நம்மைவிட்டு நீங்காவிட்டாலும் அவற்றை மேற்கொள்ளவும் தாங்கவும் கடவுள் வலுவூட்டுவார்.

மூன்றாவது கடவுள் இன்னல்கள் வேதனைகள் நடுவே ஆறுதலளிக்கிறார் (பிலி: 3: 8-11). கிறிஸ்துவின் உடலாக நாம் இருப்பதால் மகிழ்ச்சியும் ஆறுதலும் உண்டு. அவருடைய நிறைவில் நாம் ஒட்டிக்கொள்ள அவரோடுள்ள ஐக்கியத்தில் வளர வேண்டும். கடைசியாக இன்னல்கள் மிகுந்த வாழ்க்கையில் நமக்கு ஒய்வை, புத்துணர்வை, புத்தாக்கத்தை தருகிறார். ஆனால் அவரை நம்பி ஒருவரையொருவர் ஊக்கமூட்டி இன்னல்களை தாங்குவார்களா? அதுவே உங்களுக்கு ஆறதலளிக்கும். இந்த

நூல் முடிவுறா ஒன்றாகும். இது முழுமையடையாது. தூயஆவியாவைர் இதை முடிவுறா நிலையில் வைத்திருக்கிறார் - எழுத வேண்டியது இன்னும் உள்ளது. இயேசுவானவர் கற்பிக்கவும் செய்யவும் தொடங்கிய பணிகளின் பதிவே இந்நூல் அவர் நம்மில் இன்னும் செயலாற்றுகிறார். நம்மில் அவர் இன்னும் முடிக்கவில்லை. தூயாவியாவைர் நம்மில் உறைந்து வலுவூட்டி உண்மையாக இந்த பணியில் நம்பங்கினை ஆற்ற ஏவி எழுப்புவார். இயேசுவின் பணி முற்றுப்பெற்ற பிறகு நாம் அவருடைய மாட்சிமையில் இதை வாசிப்போம். இறுதியாக நம் மீட்பர் நம்மைப்பார்த்து,

***"நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே! என்று கூறுவதை நாம் கேட்க வேண்டும்"***

*இப் பாடப்புத்தகம் மூலம் நீங்கள் தேவனுடைய வார்த்தையை ஆழமாக கற்று இருப்பீர்கள் என விசுவாசிக்கின்றோம். தொடர்ந்தும் அடுத்த பாடப்புத்தகத்தினை பெற்றுகொள்வதற்காக எம்முடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.*


**Nallaiya-Jeyaraj**

**Varnavalai alvai west alvai**

**Phone.+94-777393225**

**E-.mail:jeyarajac@gmail.com**